# முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 2 | 9—3—56 | வெள்ளி | ஒலி 49


# குறளோவியம்

கருணா

"என் வாழ்க்கைத் துணைவி வார்த்தெடுத்த தங்கப் பதுமை. இல்லறத்து முல்லைக் கொடி. தாமரை மலர் மீது இரு வண்டு அமர்ந்தாற்போல் அவள் விழிகள். கோர்த்து வைத்த முத்துமாலை அவள் சிரிப்பு. இத்தனை உயர்வுடையாள் யாழெடுத்து மீட்டி விட்டால் இத்தரை மீதினிலே இணை யாருமில்லை என்பேன்.

தெங்கின் இளம்பாளை சுவைத்து வரும் தென்றல், உடலில் மோதும். அதை அந்த யாழ் வெல்லும்—என் துணைவி மீட்டுகின்ற யாழ் வெல்ல, இவ்வுலகில் யாருண்டு? எங்குமில்லை!"

★

"குயிலோசை கேட்டதுண்டு, கோதை நான் மீட்டுகின்ற யாழோசை எனக்கே தெவிட்டியதுண்டு, என் கொழுநன் வழங்குகின்ற அந்தக் குழலோசை சேர்த்த இன்பம் பேரின்பம் என்பேன! கூதிர்காலம் கொட்டுகின்ற பனிக்காற்றில் குளிரில்லை, என் கோமான் ஊதுகின்ற குழலோசை குளிர் வெள்ளம்!

சத்துள்ள முத்தமிடக் குவிகின்ற இதழ் பொருத்திக் குழலூதும் அவரை வெல்ல, கத்துகடல் சூழ்கின்ற இப்புவியில் யாருமில்லை—எங்குமில்லை!"

★

யாழ்மீட்டும் துணைவி—குழலூதும் துணைவன்-ஒருவரை யொருவர் புகழ்ந்தனர். வாழ்த்தினர். குழலையும் யாழையும் வெல்ல குவலயத்தில் எதுவுமில்லையென்ற நினைப்போடு இருவரும் தழுவினர். பின் தம்மை மறந்தனர்.

குழல் இனிதா? யாழ் இனிதா? இரண்டையும் விட இனியது ஒன்றிருக்கிறது எனக் கண்டனர். அப்போதே அல்ல; ஓரிரு ஆண்டுகள் ஓடிய பின்!

இருமலர்—ஒரு மொட்டு என்று ஆகி விட்டது குடும்பம்—

அன்புச் சின்னம்—அழகின் பெட்டகம்—அழித்தெழுதாச் சித்திரம் — அவர்கள் வீட்டில் நடமாடுகிறது—

தன் சிறு கையால் கூழை அளாவி அமிழ்தினும் இனிதாக்குகிறது. தன் மெய் தீண்டிய பெற்றோர்க்கு உடற்கின்பம் அளிக்கிறது.

இதோ உங்களிருவரின் குழலையும் யாழையும் வெல்லுகின்ற மழலை மொழி என அறைகூவல் விடுக்கிறது.

முற்றாத இதழ்களிலேயிருந்து முதிராத சொற்கள் உதிரும்போது யாழெங்கே—குழலெங்கே—அனைத்தும் இந்த மழலைக்குப் பிறகுதான் என்று முடிவு கட்டுகின்றனர் துணைவனும் துணைவியும்!

இந்த இன்பத்தைத்தான் வள்ளுவர் இருவரிகளில் எழுதிக் காட்டுகிறார்.

"குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்."

இரு நீதிபதிகள் - (மு. க.) - பக்கம்-6



Best copy available

# அவர் ஒரு ஆணவக்காரர்!

பச்சை ரத்தம் குடிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் வேங்கைப் புலி—

பிணங்களின் இடையிலே பவனி வருவதையே லட்சியமாகக் கொண்டிருக்கும் கழுகு—ஓநாய்—

—இவைகளையெல்லாம் விட மனித உயிர்களின்மேல் அலாதிப் 'பிரியம்' வைத்திருப்பவர் அன்பர் ஆச்சாரியார்!

**மனிதர்களை அவர் தன்னைப் போன்ற சகோதரப் பிராணி; என்று நினைப்பதில்லை.**

**அதிகாரம் கையில் இருக்கிறதா: ஆலவட்டம் சுழற்ற ஆட்கள் இருக்கிறார்களா; பிறகென்ன? சுட்டுக் கொல்லுங்கள்-என்று உத்தரவு போடும் மமதையாளர்!**

**ரோம் நாட்டிலே ஒரு வழக்கம் உண்டாம்;** கிருஸ்தவர்கள் இலட்சிய வாதிகளாய் உலவிய காலம் அது! இப்போது சுயமரியாதைக் காரர்களுக்கு எவ்வளவு இன்னலும், இடையூறுகளும் தரப்படுகிறதோ, அதைவிடப் பல மடங்கு எதிர்ப்புகளை பல முனைகளிலிருந்தும் சந்திக்க வேண்டியவர்களாயிருந்தார்கள்!

ரோம் நாட்டு மன்னாதி மன்னர்களுக்கு அவர்கள் மண் புழுவைப் போலக் காட்சியளித்தார்கள்!

கிருஸ்தவர்களை உயிரோடு பிடித்துவந்து சித்திரவதை செய்தார்கள்! ஆசியாவின் பெருங் காடுகளிலிருந்து பிடித்து வரப்பட்ட சிங்கங்களுக்கும், புலிகளுக்கும் அவர்களைப் பலியாக்கி, அந்தக் கோரக் காட்சியை மந்திரிப் பிரதானியருடன் அவர்கள் கண்டு களித்து வந்தனர்!

சிங்கத்தின் பாய்ச்சல் தங்களைப் பாதிக்க முடியாத அளவுக்கு மாளிகை வாசிகள்—தேனிடை ஊரிய சுனையோ என மங்கையர் இதழ்களைப் பருகுவோர்—சாய்ந்திருப்பர்.

கீழே பரிதாபத்திற்குரிய கிருஸ்தவ மக்களுடைய திரேகங்கள் காட்டுவிலங்குகளின் பற்களால் கிழித் தெறியப்படும்!

பச்சை சிசுக்கள்; பழுத்த கிழவர்கள்; வாழ்க்கைக் காவியத்தின் முதல் ஏட்டைப் புரட்டிக் கொண்டிருக்கும் காதலர்கள்—இவர்கள் அனைவருமே வேடிக்கைப் பொருளாக-ஆவி துடிக்க உயிர் விட்டுக் கொண்டிருப்பர்!

—இந்தக் கோரக் காட்சியைப் பொழுது போக்காகக் கொண்டிருந்த ரோம் நகரத்து மாமிச மலைகளுக்கு அன்பர் ஆச்சாரியார் எந்த விதத்திலும் சளைத்தவரல்ல!

பொல்லாத இந்தியைத் திணித்து தமிழகத்தைச் சித்திர வதைக் கூடமாக்கினார்!

தள்ளாத வயதில் பெரியார் ராமசாமியைக் கைது செய்து பெல்லாரி சிறையிலே வைத்துப் பூட்டினார்!

தாளமுத்து, நடராசன்-என்னும் இரு வாலிபப் பறவைகளை வேட்டையாடிக் கொன்றார்!

கல்லக்குடியிலே துப்பாக்கிக் குழலைத் திறந்து திராவிடத்து வரலாற்றிலே இரத்தக் கறையை ஏற்படுத்தி மகிழ்ந்தார்!

தூத்துக்குடியிலே பிணநாற்றம் எழுப்பினார்!

அவர் ஆட்சிக்கு வந்தபோதெல்லாம் தமிழனை தாளாத சோகத்தால் 'கோ'வெனக் கதறியிருக்கிறான்!

ஆச்சாரியார் இரும்பு நெஞ்சம் கொண்டவர்; ஏகாதிபத்ய ஆயுதங்களை ஜனநாயக மறுமலர்ச்சிக் காலத்திலும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஆணவக்காரர்!

—இதை மீண்டும் உறுதிப் படுத்துவது போலத்தான், மாம்பலத்து முனிவர் மார்ச் 2-ந் தேதியன்று, மைலாப்பூர் சீனுவாச சாஸ்திரி கூடத்திலே திரும்பத் திரும்ப, **தூக்குதண்டனையை அகற்றக் கூடாது**-என்று பேசியிருக்கிறார்!

முன்பே கணக்கிடப்பட்டு நடத்தப்படும் படுகொலைகளுக்கு என்னுடைய அபிப்ராயப்படி தூக்கு தண்டனையை வழங்கத்தான் வேண்டும்;

—என்று பலமாகப் பேசியிருக்கிறார், அன்பர் ஆச்சாரியார்!

உலகமெங்கும் தூக்குதண்டனை காட்டுமிராண்டித் தனமானது; அதை ஒழித்துவிட்டு ஆயுள் தண்டனையாகவே வழங்குவதுதான் சாலச் சிறந்தது என்று சான்றோர்கள் பலர் முயன்று வரும் நேரத்திலேதான் ஆச்சாரியார் இதற்கு வக்காலத்து வாங்கியுள்ளார்!

இங்கிலாந்திலே சென்றகிழமைதான் பாராளுமன்றத்தினர் தூக்கு தண்டனை வேண்டாம்—என்று தீர்ப்பளித்திருக்கின்றனர்.

—இருந்தும் ஆச்சாரியார் வெறித் தன்மை கொண்ட தனது கருத்தைச் சொல்லத் தயங்கவில்லை

தூக்கு தண்டனையை அறவே ஒழித்துவிட்டால் கொலைக் குற்றம் செய்வதற்கு பயமே இல்லாமற் போய்விடும். 'உம்; சிறைத் தண்டனைதானே!'—என்று சிலருக்குத் துணிச்சல் பிறக்கக் கூடும். மேலும், நாட்கள் ஆக, ஆக சிறை வாழ்க்கையும் அவ்வளவு கடினமாக இருக்காது. சிறையிலே நெருக்கம் அதிகமாக இருப்பதால், நல்லொழுக்கம் போன்ற பல காரணங்களைக் காட்டி தள்ளுபடி அளித்து ஆயுள் தண்டனையை சில வருஷ தண்டனையாகவே ஆக்கிவிடுவார்கள்.

—எனவே தூக்கு தண்டனை வேண்டும் எனக் கூக்குரல் எழுப்புகிறார் ஆச்சாரியார்!

வேறு யாராவது இந்தக் காரணங்களைக் காட்டி தூக்குதண்டனை தான் கொலைக் குற்றத்துக்கு ஏற்ற தண்டனை-என்று பேசியிருந்தால் அதை நல்லதொரு வாதத்துக்கான துவக்கம் என நாம் கருதியிருக்கலாம்!

ஆனால் பேசுபவர் ஆச்சாரியார் ஆயிற்றே! சித்ரவதையையும், சிரம் அறுபடுவதையும் கண்டு களிப்படையும் ரோம்நாட்டு கொடுங்கோலரின் ஏகவாரிசாயிற்றே! காட்டிலெல்லாம் பிணம் வேக வேண்டும்: ஆற்றிலெல்லாம் இரத்தம் ஓட வேண்டும்; பாட்டிலெல்லாம் அய்யோ! அய்யோ!—என்ற அலறல் கேட்க வேண்டும்—என்ற பித்து மனப்பான்மை கொண்ட பெரியவரல்லவா, இவர்!

—வாதம் செய்ய வருகிறாரென்று எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? உள்ளத்திலே அடக்கி வைத்திருந்த தணியாத ஆசையையல்லவா வெளியிடுகிறார்; ஒளித்து வைத்திருந்த காட்டுமிராண்டி இச்சைகளையல்லவா படமாக்குகிறார்!—இப்படித்தானே மனப் போக்கைப்பற்றி எண்ண வேண்டியிருக்கிறது!

சரி; வாதத்துக்கென்றே வைத்துக் கொள்ளுவோம்! அப்போதும் ஆச்சாரியாரது கருத்துக்கள் மனிதாபிமானத்துக்கு மதிப்பளிக்கப்படும் இருபதாம் நூற்றாண்டிற்கு ஒத்துவருவதாக இல்லையே!

அன்றைய தினம் அதே கூட்டத்தில் பேசிய நீதிபதி **பதஞ்சலி சாஸ்திரி**யாரே பேசியுள்ளார்:

குற்றவாளிதான் இரக்கமில்லாமல் படுகொலை செய்கிறானென்றால், அரசாங்கமும்குற்றவாளியின் நிலைமைக்குத் தாழ்ந்து சென்று அவனுடைய உயிரைப் பறித்துக் கொள்ளக் கூடாது!

—இயற்கையிலே இரத்தவெறி பிடித்தலையும் ஆச்சாரியாருக்கு பதஞ்சலி சாஸ்திரியார் இப்படி சரியான பதில் கொடுத்திருக்கிறார்!

அது மட்டுமா?

"பிரிட்டீஷ் பாராளுமன்றம் 1949-ம் ஆண்டு நியமித்த கமிஷனின் அறிக்கை, தங்களுக்குக் கிடைத்த புள்ளிவிபரங்களின் படி தூக்கு தண்டனையை ரத்து

★ தொடர்ச்சி 10-பக்கம்

## முடிவு என்ன?

*மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட் நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு முன்பே அந்த 'ரகசியங்கள்' வெளியே தெரிந்து விட்டனவாம்!*

*பம்பாயிலே பட்ஜெட்டின் கைஏட்டுப் பிரதிகள் விலைக்கு விற்கப் பட்டனவாம்!*

*—நிதி அமைச்சரது இலாக்காவின் கவனக் குறைவை எடுத்துக் காட்டும் இந்தத் தகவல்கள் பாராளுமன்றத்திலே வெளியாகியிருக்கின்றன!*

*பொதுவாக பட்ஜெட் ரகசியங்கள், பாராளுமன்றமேறுவதற்கு முன் வெளியாகி விட்டால், சம்மந்தப்பட்ட அமைச்சர் ராஜிநாமா செய்வதுதான் அரசியல் சம்பிரதாயம்!*

*ஆங்கில நாட்டிலே டால்டன் என்பவர், இதுபோன்ற நிலை உருவானபோது தனது இலாக்காவின் அலட்சியப் போக்கிற்குத் தானே பொறுப்பேற்று நிதி அமைச்சர் பதவியைத் துறந்தார்!*

*ஏன்; நிதி நிபுணர் ஆர். கே. சண்முகம் அவர்களைக்கூட பட்ஜெட் ரகசியம் வெளியான காரணத்தைக் காட்டித்தான் வெளியேற்றினர்!*

*—இப்போது தேஷ்முக் முன்னிலையில் குற்றச்சாட்டு குவிந்திருக்கிறது!*

*பட்ஜெட் ரகசியங்கள் வெளியானது நிரூபிக்கப்பட்டால் தேஷ்முக் ராஜிநாமா செய்வதுதான் நாகரிகமான முறை!*

*நேருவுக்கு தேஷ்முக்கை விட்டால் தக்க துணை வேறு கிடையாது!*

*—என்ன செய்யப் போகிறார்? தேஷ்முக்தான் என்ன பதில் கூறப் போகிறார்?*

*—இந்த உபகண்டம் பதிலை ஆவலோடு எதிர்நோக்கியிருக்கிறது!*

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 9--3--56 வெள்ளி

## நமது நிலை!

வடக்கு வாழ்கிறது—தெற்கு தாழ்கிறது என்ற எண்ணம் சென்ற மார்ச் 20-ந் தேதியன்று நம்மால் நாட்டினரின் நெஞ்சிலே வித்திடப் பட்ட பிறகு, அமைச்சர்களும், இப்படிப் பேசுவது அசட்டுத்தனம் என்று நினைப்பவர்களும் உணர்ந்து பார்க்கின்ற அளவுக்கு அது கிளை விட்டு வளர்ந்திருக்கிறது; பலன் தந்து வருகிறது.

விந்தியத்திற்கு இப்பால், 'இந்தியன்' என்னும் போர்வைக் குள்ளே புழுங்கிக்கொண்டிருக்கும் திராவிடன் தேய்பிறையாகிக் கொண்டிருக்கிறான் — என்ற நிலை எல்லோரும் புரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது!

அதே நேரத்தில் ஜெய்ஹிந்த் கோஷம் மூலம், எண்ணத்தில்—இனத்தில்—கலை, கலாச்சாரத்தில் வெவ்வேறாய் இருக்கும் மக்களையெல்லாம் ஒன்றாக்கி முடிச்சுபோட்டு, அந்தச் சித்திரவதைக்கூடத்தின் திறவுகோலைத் தன கையிலே வைத்திருக்க வேண்டும்—என்று கருதிடும் குள்ள மதியினருக்கு, இந்த நாட்டுக் கம்யூனிஸ்ட் நண்பர்களும் துணைபோவதைப் பார்த்தோம்.

அடிமை விலங்கு ஒடித்து, வீறு கொண்டு எழச்செய்யும் சரித்திர நிகழ்ச்சிகள் அத்தகையோருக்குச் சாரற்ற சக்கையாகத் தென்பட்டன!

பிரிவினை வேண்டாமென்னும் பெரும் உபதேசம், நரி வேலை செய்தாவது நம்மைச் சாய்த்துவிட வேண்டும்—என்ற மனப்போக்கு நாலா பக்கங்களிலிருந்தும் உதயமாயின!

ஏக பாரதத்தில் பேதம் ஏற்றுக்கு?-எனக் கூப்பாடு போட்டு, வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையே எழுந்துள்ள வெடிப்புகளை மெழுகு பூசி மறைத்துவிட முயன்றனர்.

—ஆனால் இன்றோ உண்மை உதய சூரியனைப்போல எழுந்து நடமாடத் துவங்கிவிட்டது!

சென்னை சட்டசபையிலே பேசிய தோழர் ராமமூர்த்தி, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய இந்தப் பகுதியிலே பெரிய தொழில்கள் ஏற்படவில்லை-எனக் கூறிவிட்டு, இந்த நாடு ஒரே நாடாக ஒற்றுமையாக இருப்பதற்காகவாவது, பின் தங்கிய பிரதேசங்கள் அபிவிருத்தியடைய திட்டம் போடவேண்டுமென்று—பேசியிருக்கிறார்!

அப்படி செய்யப்படாவிட்டால், இந்த நாடு ஒரே நாடாக, ஒற்றுமையாக இருக்காது என்பதையும், மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கு—தெற்கு என்னும் பேதம், திட்டக்கமிஷனின் தகாப் போக்கு—போன்ற காரணங்கள் பிரிவினைக்குப் பாதை அமைத்து விடுமோ—என்ற கவலை அவருக்கு!

தென்னகம் கவனிக்கப் படவில்லை—நாம் கண்ணீர் மல்கக் கூறுகிறோம்; அதே நேரத்தில் கம்யூனிஸ்ட் நண்பர்களும் இதையேதான் கூறுகிறார்கள், வேறொரு காரணத்திற்காக!

ஆனால் எப்படியோ, ராமமூர்த்தி போன்றவர்கள், தென்னகத்திற்கு வளர்ச்சித் திட்டங்களிலே உரிய பங்கு அளிக்காவிட்டால் இங்கே உரிமைப் போராட்டம் வலுத்துவிடும்—என்று ஆட்சியாளரைப் பார்த்து, மனம் புழுங்கி, அன்னை பாரதத்தின் அங்கங்கள் அறுபடுவதா—என அனல்பட்ட புழுவாகத் துடிக்கப் பெற்று, மேற்கண்ட உண்மைகளை வெளியிடுகிறார்கள்! அந்த அளவுக்கு மார்ச் 20 நாட்டவரின் நெஞ்சிலும், திராவிடத்து வைரிகளின் நெஞ்சிலும் வேலை செய்து, பூத்துக் காய்த்துக், கனியாகி யிருப்பது நாம் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய செய்தியாகும்!

இதே கருத்தை, மந்திரி சுப்ரமணியம்கூட சட்டசபையிலே வெளியிட்டிருக்கிறார்.

சென்னை மாநிலம், இந்த உபகண்டத்திலுள்ள இதர மாநிலங்களைவிட பொருளாதாரத் துறையிலே மிகவும் பிற்போக்கான நிலையிலே இருக்கிறதாம்!

"தனி நபர் வருமானத்தைக் கவனிக்குமிடத்து, சென்னை ராஜ்யம் பிற்பட்ட தென்றே கூறவேண்டும். நம் ராஜ்யத்தில் ஏழ்மை அதிகம்; சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளச் சேதங்களின் போது அது நன்கு புலப்பட்டது"

—என சுப்ரமணியனார் பேசியுள்ளார்!

சென்னையைவிட இந்த உப கண்டத்தின் இதர பகுதிகளிலே வாழ்வோர் வசதிமிக்கோராய்த் திகழ்கின்றனராம்!

தமிழனல்லாதான் வருமானத் தேன் குடிக்க, நாமோ வறுமைத் தேளினால் தீண்டப்பட்டு வருகிறோமாம்!

—நெஞ்சு நெகிழ்கிறது, 'ஏக பாரதப் பிணைப்பு' நமக்குத் தேடிக் கொடுத்திருக்கும் இழிநிலையை எண்ணும்போது!

முக்கடலில் முத்தெடுத்து, அகிலும், தேக்கும் அழியாக் குன்றமும் பெற்று ஐசுவரியப் பூக்காட்டில் குன்றுபோல் திரிந்தவன் இன்று கோவணாண்டியாய்த் திரிய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறான்!

—ஜெய் ஹிந்த் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் சொத்து; 'பாரதம்' எழுதி வைத்திருக்கும் ஆஸ்தி இவைதான் என்பதை மாயையில் உழலும் அன்பர்கள் தெரிந்து கொள்ளட்டும்! ★




ஆண்டுக்கொரு முறை புது வரி விதிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும் சென்னை அரசாங்கம் இந்த ஆண்டும் ஏழை — நடுத்தர வர்க்கத்தினரைப் பாதிக்கும் வகையில் சர்க்கரை வரியை உயர்த்தி யிருக்கிறது!

## தி. மு. க. உறுப்பினராகிவிட்டீர்களா?

# ★ வீர வாலி - உணர்ச்சி விருந்து ! ★

வீர வாலியாக நடித்த தோழர் தாண்டவன்.

★

1946-ம் ஆண்டு என்று எண்ணுகிறேன்; சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த எடப்பாடி யென்னும் சிற்றூரில் பெரியார் ராமசாமி அவர்கள் தலைமையிலே ஒரு நாடகம். அதற்கு நானும் பெரியாருடன் போயிருக்கிறேன். அப்போதெல்லாம் நான் ஈரோட்டு வாசி. 'குடிஅரசு' பத்திரிகை என் பொறுப்பில்' எழுத்தோவியங்களைப் பொறுத்த மட்டில்!

எடப்பாடியில் நாடகத்தை நடத்திபவர்கள் திராவிட இயக்கத்தினர். நாடகத்தை தீட்டியவரும், முக்கிய பாத்திரமேற்று நடித்தவரும்—நான் சொந்தம் பாராட்டி அண்ணன் என்று அழைக்கும் திரு. ப. கண்ணன் அவர்களாகும்.

இப்போது ப. கண்ணன் என்றால்தான் அனைவருக்கும் புரியும். கண்ணன் பகுத்தறிவு என்னும் ஏட்டுக்கு இப்போது ஆசிரியர். இதே கண்ணன், ஜே. பி. கிருஷ்ணன் என்ற பெயரில் 'பகுத்தறிவு' என்ற பத்திரிகைக்கு சுயமரியாதைச் சிறுகதைகள் தீட்டி வந்த முதல்வர் என்பதை கேள்விப்படும் போது ஒரு சிலருக்கு வியப்பு தோன்றாமலிருக்காது. தென்னகத்தில் சுடர்பரப்பி எழுந்த சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடும் பிள்ளைகளில் ஒருவராகத் திகழ்ந்து சேலம் மாவட்டத்திலே செயல் பல புரிந்து—மக்களை மறுமலர்ச்சிப் பாதைக்குத் திருப்பும் மாவீரர் பட்டியலிலே ஒருவராக ஆகிக் கொண்டவர் தான் ஜலகண்டபுரம் ஜே. பி. கிருஷ்ணன். இன்றைய ப. கண்ணன்!

**ராமாயணத்தை, ராமாயணத்தால் ஆராய்ந்து ராமனின் இழிபண்புகள் எத்தகைத்து என்பதை நாடகவாயிலாக-நாடகமேடை வாயிலாக முதன் முதல் முழக்கிய தீரர் ப. கண்ணன் அவர்கள்தான்!**

அவரது 'வீர வாலி' நாடகம் கண்ட பெரியார் அவர்கள், ராமாயணத்தில் இதுபோல் இன்னொரு கட்டத்தை தானே நாடகமாகத் தீட்டப் போகிறேன் என்று மேடையிலேயே கூறினர். அவ்வளவு உற்சாகம் பிறந்தது அவருக்கு! இத்தனைக்கும் நாடகத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் நடித்த நாடகமல்ல அது! என்னுடைய இளம் இதயத்தில் புரட்சிக் கனலை யூட்டுவதற்கு துணை புரிந்த பல நிகழ்ச்சிகளில் அந்த 'வீர வாலி' நாடகமும் ஒன்றாயிற்று.

அதன்பின்னர் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே நாடகத்திற்கு, அதே ஊரில், நான் தலைமை வகிக்கும் வாய்ப்பு—29—2—56 அன்றைய தினம் கிடைத்தது. 'வேலாயுதம் படிப்பக' நிதிக்காக நாடகம் நடத்தப்பட்டது. பழம் பெரும் தென்னகத்தில் இருட்பது போலவே உணர்ந்தேன் நாடகம் காணும்போது! வீர வாலியாக நடிக்கும் தோழர் தாண்டவனின் உணர்ச்சி மிக்க உரையாடல்களைக் கேட்டபோது என் உடல் நலிவெல்லாம்கூட எங்கேயோ பறந்து விட்டது.

ஜானகியைப் பிரிந்து கானகத்தில் சுற்றி, மறைந்திருந்து வாலியைக் கொன்று மானமொன்றில்லாப் பரம்பரை யென்பதை நிலைநாட்டிக் கொண்ட ராமனாக தோழர் ராமலிங்கம் நடிக்கிறார். நடிப்பா அது! இயற்கை—இயற்கை!

அண்ணனுக்குத் துரோகம் செய்யும் கொடியன் சுக்ரீவனாக தோழர் வரதராசலு நடிக்கிறார். அவரது பேச்சையும் நடிப்பையும்விட அங்கஅசைவுகள் அபாரம்-அபாரம்!

தாண்டவன், இராமலிங்கம், வரதராசலு இவர்கள்-எல்லாம் எடப்பாடி வட்டாரத்திலே இலட்சியக் கொடியைக் காத்து நிற்கும் இராவணர்கள்'உருவில் மட்டுமல்ல; உள்ளத்திலும்! 'வீரவாலி' நாடகம் பெருமை பெற அவர்கள் மட்டுமின்றி,

இராமனாக நடித்த தோழர் இராமலிங்கம்.

★

தோழர்கள் பெருமாள், பண்டரிநாதன், முனியப்பன், மெய்வேல், முத்து, நாராயணன், காளியப்பன், தங்கவேலு மற்றும் எல்லாக் கழக வீரர்களும்ஒத்துழைத்தார்கள்.

★

நாடகம், நாட்டு மக்களுக்கு கலை விருந்தாக மாத்திரமின்றி மூடக் களை நீக்கும் மருந்தாகவும் பயன்பட வேண்டுமென்ற கொள்கைக்கு நல்லதோர் படைக் கலன்தான் வீரவாலி!

அதன் ஆசிரியர் - வாழ்க்கையில் காட்டும் சிக்கனத்தையே வார்த்தைகளிலும் காட்டி வாலிப உள்ளங்களை எரிமலையாக மாற்றக் கூடிய சக்தி பெற்றவர்.

குடமிட்ட விளக்காக இருக்கும் அண்ணன் ப. கண்ணன், குன்றிலிட்ட விளக்காக ஒளி பரப்பிட-நாடு ஒத்தாசை புரிய வேண்டும். போர்வாள் இருக்கிறது; பயன்படுத்திக் கொள்ளாதது வீரனின் தவறு தானே!

'வீரவாலி' தீட்டப்பட்ட போர்வாள்-திராவிடத்தின் விடுதலைப் படைக் கலன்களிலே ஒன்று! அதை, நமது நடிகமணிகள் கரமேந்திக் கலைக் களம் புகுந்து தலைக்கனம் கொண்டவர்க்குத்தக்க பாடம் தந்து தாயகத்தின் பழம் பெருமையைப் பரப்புவார்களாக!

★

## கருணாநிதி நிகழ்ச்சிகள்

தர்மபுரி, எடப்பாடி ஆகிய இடங்களில் நடைபெற்ற புதுவெள்ளம், வீர வாலி ஆகிய நாடகங்களில் தலைமை வகித்துவிட்டு, 1-3-56 காலை சேலம் வந்த தோழர் மு. கருணாநிதி, முல்லை சத்தி, தஞ்சை சண்முகவடிவேல் எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் சேலம் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் தம்பம்பட்டி தோழர் ராமலிங்கம் அவர்களை சந்தித்தனர். சந்தித்துப் பேச அனுமதி பெற முடியாமல் தூர இருந்து தான் பார்க்க நேரிட்டது. தம்பம்பட்டியில் பிப். 20-ம் நாள் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பலமாகத் தாக்குண்டவர் ராமலிங்கம். அவரது இடதுகாலை அநேகமாக இழக்க நேரிடும் என்று கூறப்படுகிறது.

அன்று பிற்பகல்-ஆத்தூரில் இருந்து இருபதாவது மைலிலுள்ள தம்பம்பட்டி கிராமத்திற்கு கருணாநிதி, சத்தி, சண்முகவடிவேல், சேலம் சாமி ஆகியோர் சென்றனர். அங்குள்ள கம்யூனிஸ்ட், சோஷலிஸ்டு தோழர்களையும், மற்றும் மக்களையும் சந்தித்து துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விபரங்களை அறிந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தையும் கண்டனர். காயமடைந்து சிறையிலிருந்து பின்னர் ஜாமீனில் வெளி வந்துள்ள தி. மு. க. நண்பர் ஒருவரையும் சந்தித்து தேறுதல் கூறிவிட்டு அங்கிருந்து கல்லக்குரிச்சி வந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் தி. மு. க. தமிழரசுக் கழகத் தோழர். இருவரையும் பார்த்தனர். பின் கல்லக்குரிச்சியில் தி. மு. க. தோழர் வேலாயுதம் அவர்களுடன் சம்பவத்தைப் பற்றிய விளக்கங்கள் பெற்று சென்னை வந்து சேர்ந்தனர்.

**சிறப்புக் கூட்டம்.**

கோவை நகரக் கழக நிதிக்காக 18—3—56 ஞாயிறன்று

அறிஞர்

**அண்ணா அவர்கள்**

பேசுவார்

நகர தி. மு. க.

இடம், பின்னர் அறிவிக்கப்படும்.

**5-வது ஆண்டு விழா**

மாயூரம், ஆசிரியர் வேலாயுத மன்ற 5-வது ஆண்டு விழா 12-3-56 திங்களன்று நடைபெறும்.

மு. கருணாநிதி, எஸ். எஸ். இராசேந்திரன், என். எஸ். இளங்கோ, சொர்ணம் ஆகியோர் கலந்துகொள்வர்.

# தாழம்பூ!

## ஏ. கே. வில்வம்

குணவதி கொடுத்து வைத்தவளடி நீ; உன்னைப்போலவே வாழ்க்கையில் ஒவ்வொரு பெண்ணுக்கும் வெற்றி கிடைத்துவிட்டால் பெண்கள் சமுதாயம் எவ்வளவு முன்னேறிவிடும் தெரியுமா? அதற்காக வெற்றியைத் தேடிக்கொண்டு 'காதல் களத்தில்' குதித்துவிடும் எத்தனையோ சகோதரிகளின் தோல்வியையும் — துயர முடிவையும் நாம் கல்லூரி வாழ்வில் பார்க்க முடிந்தது; அந்த பைத்தியக்காரப் பெண் சுகுணா—நினைவிருக்கிறதா— மாஜிஸ்ட்ரேட் மணிவண்ணனின் செல்வத் திருமகள், என்ன ஆனாள்? எல்லோருமே என்ன நினைத்தார்கள்? வேணுவின் இதய மாளிகையிலே நாதம் எழுப்பும் வீணை என்றுதானே முடிவு கட்டினார்கள்; 'ஊர் சுற்றித் திரிபவன், உருப்படாதவன்; அவனுக்கா என் சுந்திர நிலவை தத்தம் செய்வேன்' என்று அவள் தந்தை சீறிய பொழுதுகூட நீ என்ன சொன்னாய்? உள்ளத்தால் புரட்சிக் கவிஞரின் பூங்கோதையும் பொன் முடியுமாகி விட்ட, இந்த காதல் புருக்களை யாரால் பிரித்து வைக்க முடியும் — சாவைத் தவிர என்று கூறியது நினைவிருக்கிறதல்லவா?

அந்த ஜோடிப் புருக்களின் முடிவு என்னவாயிற்றும்— தெரியுமா? மாஜிஸ்ட்ரேட் மணிவண்ணன், சுகுணா — வேணு. திருமணத்திற்கு கடைசிவரை சம்மதிக்கவில்லையாம்; 'முற்றிய நிலவாகி விட்டதப்பா எங்கள் காதல்' என்று சுகுணா முறையிட்டபோது, 'யாரைக் கேட்டம்மா உங்கள் காதலை முற்ற விட்டீர்கள்?' என்று கன்னத்தில் அறைந்ததைப் போல சுடச் சுடக் கேட்டாராம். அதற்குப் பிறகு அவனும் சலீமாகவில்லை; இவளும் அனார்கலியாகவில்லை!

பொன் குவியலிலே புரண்டு கொண்டிருக்கிறான் என்று கூறி, யாரோ ஒரு புதியவனிடம் சுகுணாவைப் பிடித்துக் கொடுத்தார் மணிவண்ணன். ஆரியர்களின் யாக குண்டத்தை நோக்கிச் செல்லும் பசுவைப்போல, சுகுணா அந்தப் புதிய மனிதரின்—பின்னாலே சென்றாள்! அய்யோ குணவதி! எப்படிச் சொல்வது; சரியாக ஆறு மாதம்கூட ஆகவில்லை; தனியாக தகப்பன் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டாள் சுகுணா, விதவையாக அல்ல — விசாரம் குடிகொண்டவளாக — அந்தப் புதிய மனிதருடன் வாழ முடியாதவளாக!

'அவனுக்கு என்னம்மா, பொன் குவியலிலே புரண்டு கொண்டிருக்கிறான்' என்று சொன்ன மணிவண்ணர்கூட வாயடைத்துப் போனார். புதிய உறவு-புகைக்கும் எரிமலையாகிவிட்டதே; என் செல்வ மகளை வாழாவெட்டியாக்கி விட்டதே — என்று கண் கலங்கினார். குணவதி இதை ரகசியமாக வைத்துக்கொள்; இல்லாவிட்டால் படித்தவுடன் இந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்துவிடு; ஆம் குணவதி; சுகுணா — பருவச் சுமையைத் தாங்க முடியாமல் படுகுழியில் விழுந்துவிட்டாள். காதல் திருமணத்திற்கே சம்மதிக்காத மணிவண்ணர், விதவைத் திருமணத்திற்கா சம்மதிக்கப் போகிறார்; அவருக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் — 'ஊருக்கு நீதி வழங்க வந்துவிடுகிறார், வீட்டிலே ஆயிரம் ஊழல்களை வைத்துக் கொண்டு, இப்படி ஊரார் பேசுவது அவர் காதில் விழாமலா இருக்கும்?

வேளைக்கொரு சோளி! விதவிதமான ஜார்ஜெட்; வாலிபர்களின் இதயக் கதவுகளைத் தட்டும், ஒய்யார உடலமைப்பு; உல்லாச நடை; நாட்டியம் பழகும் இடை; காவியக் கண்கள்; கதை ஏன் குணவதி; இப்பொழுது அவள் ஓர் நடமாடும் பருவரோஜா; விரிதேன் வாரி உண்ண எத்தனையோ வண்டுகள்; மகரந்தத்தூள் என்று கருதி அவள் மருட்டும் விழியிலே, மயக்கு மொழியிலே ஓயாமல் புரண்டுகிடக்கும் ஆண் வண்டுகள், அப்பப்பா! ஆபாசம்! ஆபாசம்!

குணவதி, சுகுணாவின் சுயசரிதையின் கடைசி பக்கம், யார் எழுதினாலும் இப்படித்தான் முடிக்க வேண்டும்; அணை போட்டுத் தடுக்க முடியாத அளவிற்கு ஆபாசக் கருத்துக்கள் அவள் நெஞ்சத்தில் காட்டாற்று வேகத்திலே இன்னும் பாய்ந்து கொண்டிருக்கிறது; சகோதரி, ஒரு முறை தற்செயலாக சுகுணாவை 'மிட்லண்டில் ஒரு ஆங்கிலப்படம் பார்க்கச் சென்றிருந்த பொழுது கேட்டேன் 'ஏனடியம்மா, துரோபதையாகி விட்டாய் என்று' அதற்கு அவள் சற்று சடுகடுப்பாக சொன்ன பதில் இன்னும் என் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன!

'நான் சமுதாயத்தையும் சாஸ்திர சம்பிரதாயங்களையும். சதிகாரப் பெற்றோர்களையும் பழி தீர்த்துக் கொள்ளுகிறேன்; முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்; ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டு என்ற கொள்கை யார் சொன்னதாலும், அது ஒரு கோழைக் கொள்கை; அடிமைப் புத்திக்கு அச்சாரம் கொடுத்தது போலாகும்; சரியோ, தவறோ, இது நான் கொண்ட கொள்கை; இந்த சமுதாயத்தை இப்படியாவது திருத்த முடியுமா என்ற சோதனையில், நான் வெட்டுக்காயாக மாறுவதைப்பற்றிக் கவலையில்லை; முயன்று பார்க்கிறேன், என் முயற்சிக்குத் தோல்வியும் பரிசாக இருக்கலாம்! இப்படி மேடையிலே நின்று கொண்டு பிரசங்கம் செய்பவளைப் போல ஆரம்பித்தாள் சுகுணா; அக்கம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரசிக மகாஜனங்கள் நாங்கள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து 'உஸ்' என்ற ஒலியெழுப்பி தங்கள் ஏகோபித்த கண்டனங்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

'ஒரு குற்றம் பல குற்றங்களின் பிறப்பிடம்' என்று யாரோ ஒரு அறிஞன் சொல்லி வைத்திருந்த வாசகங்கள் என் நினைவிற்கு வந்தன. அதைக் கூட வெளியில் சொல்லவில்லை; இதயத்தோடு வைத்துக் கொண்டேன்; நமக்கேன் வீண் வம்பு என்ற நினைப்போடு.

அதற்குப் பிறகு அவளைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றனவே தவிர சுகுணாவை சந்திக்க முடியவில்லை; குணவதி சில பெரிய மனிதர்களின் தொடர்பில்லாத மேடைப் பிரசங்கத்தைப் போல, எங்கோ ஆரம்பித்து; எதற்கோ தொடங்கி சுகுணாவின் சோகக் கதையிலே கொண்டு வந்து முடித்து விட்டாளே, என்று எண்ணுவாய் இல்லையா; பெண்களுக்கு மென்மையான இதயம் என்று சொல்லுகிறார்களே, அந்த மென்மையான இதயங்கள் தொடர்ந்து துயரச் செய்திகளால் தாக்கப்படும்பொழுது எஃகுத் தகடுகளாக மாறி விடுகின்றனவே, என்பதைக் குறித்து எண்ணினேன் கதை வளர்ந்து விட்டது!

குணவதி, மனித இதயங்களெல்லாம், நினைப்பதை அப்படியே காட்டி விடும் கண்ணாடியாக இருந்தால் உலகத்தில் எத்தனையோ கொலைகளும், அக்ரமங்களும் தடுக்கப்படுமல்லவா?

அதுவும் பெண் மனம் இருக்கிறதே அது ஒரு பயங்கரப் போர்க்களம்; அதனால்தான் வீணையும், நாதமும், என்று இணைந்து வாழும் காதலர்கள் கூட, சில நேரங்களில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமல் பிரிந்து வாழ நேரிடுகிறது; கலங்கரை உச்சியிலே நின்று கொண்டு பார்க்கும்பொழுது, ஆர்ப்பரிக்கும் அலைகடல்கூட, அமைதி நிறைந்த பளிங்குத் தடாகமாகத் தான் காட்சியளிக்கிறது. அருகே சென்று பார்க்கும் பொழுதுதானே பயங்கர கொந்தளிப்பை புரிந்து கொள்ள முடிகிறது.

பெரும்பாலான ஆடவர்கள், பெண்கள் விஷயத்தில் கலங்கரை உச்சியிலே நின்று கொண்டிருக்கும் மனிதர்களாகவே இருக்கிறார்கள்; பெண்களின் இதயத்திலே நடைபெறும் மனப்புயலை, உள்ளப் போராட்டத்தை புரிந்து கொள்வதே இல்லை: அந்த மனப்பசிக்காரர்களுக்கோ, தேவையானதெல்லாம் பெண்களின் தேன் இதழும், தேக காந்தியும்தான்! இதை எத்தனை காலத்திற்குத்தான் 'காதல்' என்ற நாகரீகப் பட்டுத் துணியால் மூடி வைத்துக் கொண்டிருக்க முடியும்? 'காதல் என்பது உள்ளப் பிணைப்புதான், உடலழகில் ஏற்படுவதல்ல' என்றால், அழகான ஆண் பிள்ளைகளுக்கு,— இந்த உலகத்தில் நல்ல இதயம் படைத்த ஒரு குருட்டுப் பெண்ணோ, நொண்டிக் கிளியோ ஏன் கண்களுக்குப் படாமல் போய் விடுகிறார்கள்;

போதுமடியம்மா உன் தத்துவ விளக்கம், ஒரே தலைவலி! என்று நீ சொல்வது என் காதுகளில் விழுகிறது; கடிதமும் நீளுகிறது; எது எப்படியோ, உன் வாழ்வில் இன்பம் கொழிக்கட்டும், சாந்தி நிலவட்டும்; உன் இதய சிம்மாசனத்திலே இடம் பிடித்துக் கொண்ட, அந்த 'டாக்டர்' உன் மனம் கோணாமல் நடந்து கொள்கிறாரா? அதை மட்டும் தெரிவித்துவிடு!

உன் அன்புள்ள சகோதரி,
**கிருஷ்ணா.**

ஏனோ தெரியவில்லை பெடருக்குப் பின்னால் ஒட்டிக் கொண்டிருந்த 'பாய்'யை விழுங்கி விட்டாள்; பைத்தியக்காரப் பெண்— அவள் கண்களுக்கு நான் தூரத்துப் பச்சை! கடிதம் என்ற பெயரால் கதையொன்றே எழுதிவிட்டாள்; என் இதயத்தின் அடித்தளத்திலே உறங்கிக்கிடந்த 'மனித ஆசை'களைத் தட்டி எழுப்பி விட்டாள்; தத்துவம் படித்தவள்; உலகமே அவள் கண்களுக்கு ஒரு தத்துவ உருண்டையாகத் தெரிகிறது; அவள் மட்டும் நேரில் வந்திருந்தால் அவள் சிவந்த கன்னங்களில் ரத்தம் பொங்கும்படி ஓங்கி ஒரு அறை கொடுத்திருப்பேன், இதுதான் தத்துவம் என்றுசொல்லி! 'பறவைகள் புழு, பூச்சிகளைத் தின்கின்றன; புழு, பூச்சிகள் செத்த பறவைகளைத் தின்கின்றன' யாருக்கு வேண்டும் இந்த தத்துவம்! வாழ்க்கையில் எதற்குப் பயன்படும்? வேண்டுமானால் இப்படி வைத்துக் கொள்ளலாம்; பெண்களின் இளமையை ஆண்கள் அணு அணுவாகவும், ஆண்களின் இளமையைப் பெண்கள், சிறிது சிறிதாகவும், தின்னப் பார்க்கிறார்கள்; உண்ணச் சேமிப்பது எப்படி சுய உபயோகத்திற்கோ, அதைப் போலவே ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் காத்து வருவதும்—சுய உபயோகத்திற்குதான்; சே! சே! உலகமே ஒரு சுயநலக் கோளம்! சூதர் கோட்டம்! இப்படிப் பலப்பல எண்ணங்கள் என் சிந்தனை வீதியிலே குதித்தோடி வந்தன அந்தக் கடிதத்தைப் படித்தவுடன்! கிருஷ்ணா என் கல்லூரித் தோழி; நானும் கிருஷ்ணாவும்— இன்று சமுதாயச் சுழலிலே சிக்கிக் கொண்டு, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எட்டியோ, தேக்கோ, ஏதோ கிடைத்த ஒன்றைப் பிடித்துக் கொண்டு. ஊரார் கண்களுக்கு அவமானச் சின்னமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் சுகுணாவும்; ஒன்றாகத்தான் படித்தோம்; ஆனால் இன்று மூவர் பாதையும் மூன்று திசையில்! ஆம், முற்றிலும் மாறுபட்ட வேறு வேறு திசைகளில்!

கிருஷ்ணா தத்துவம் படித்தாள்; கிருத்துவ மதத்தைச் சேர்ந்த புரபசர் ஒருவரை மணந்து கொண்டாள்; தங்க ஒளி வீசும் குடும்ப விளக்கானாள்; ஒருவரையொருவர் புரிந்து கொண்டனர்; உள்ளம் விட்டுப் பழகுகின்றனர்; அங்கே பிணக்குக்கும், பூசலுக்கும் இடமில்லை; அவர்களுக்கு வாழ்க்கை ஒரு பளிங்குத் தடாகமாக அமைந்துவிட்டது; இல்லறப் படகு நகர, இருவர் துடுப்புக்களும் இணைந்து அசைகின்றன; இன்ப மாளிகை நோக்கி நகர்ந்தபடியே இருக்கிறது அவர்கள் வாழ்க்கைப் படகு!

சுகுணாவின் வாழ்க்கைப்படகோ? ஒரு துடுப்பு ஒடிந்து விழுந்துவிட்டதால், சுழலிலே சிக்குண்டு, உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கிறது, யார் கை கொடுத்தாலும் அதை

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

“இன்றைய சூழ்நிலையில் நம் நாட்டிற்கு சாக்ரடீசைப் போன்ற மனப்பான்மை கொண்டவர்கள் தேவை. அவர் பயன்படுத்திய கொள்கையான — எதையும் ஏன், எதற்கு என்று ஆராய்ந்து பார்க்கும் தன்மையை வளர்க்க வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட பண்பினை வளர்க்க முற்படும் பொழுது ஆழ்ந்த கருத்துக்கள் இல்லாது வெறும் அடுக்கு மொழிகளை மட்டுமே பயன்படுத்துவது சிறந்ததல்ல, அது சாக்ரடீசின் பண்புமாகாது. சென்ற விடமெல்லாம் அறிவு கொளுத்துவதே சாக்ரடீசின் பண்பாக இருந்தது. என்பதை நாம் மறந்து விடக் கூடாது.”

“தமிழ்நாடு”
2-3-56.

பிப்ரவரி 29ம் நாள் மதுரைத் தியாகராசர் கல்லூரி விழாவின் போது தலைமை வகித்த மதுரை மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு. எஸ். ரங்கராசன் அவர்களின் சொற்பொழிவில் சிந்திய வாசகங்கள்தான் மேலே காணப்படுபவை.

நீதிபதி தலைமை வகித்தது கல்லூரியின் விழாவுக்காக! அறிவுரையாற்றியது மாணவர்களின் முன்பு! அறிவுரைக்காக அவர் எடுத்துக் கொண்ட விஷயமோ மிகச் சிறந்தது! சாக்ரடீசைப் பற்றியது!

“சிந்திக்கக் கற்றுக் கொள்; உன்னையே நீ அறிக!” என்பன போன்ற முழக்கங்களை ஏதென்சின் மூலை முடுக்குகளிலே கூட எழுப்பி அதன் காரணமாக நஞ்சு பருகிய நல்லோனின் சரித்திரத்தை உதாரணத்திற் கழைத்த நீதிபதியைப் பாராட்டத்தான் வேண்டும். கிரேக்க நாட்டு நீதி மன்றம் கீர்த்திமிக்க சாக்ரடீசை விஷமிட்டு அழித்தது. சரித்திரத்தின் ஏடுகள் நமது கண்ணீரால் நனைகிறது அந்த சம்பவத்தைப் படிக்கும்போது!

இதோ! ஒரு நீதிபதி மதுரையிலே பேசுகிறார்; சாக்ரடீஸ் பண்புகளின் உறைவிடம் என்று!

இவரது நீதிமன்றத்துக் கூண்டிலே சாக்ரடீஸ் நிறுத்தப்பட்டிருந்தால் அவனுக்கு விடுதலை மட்டுமல்ல; அவன் விரும்பியவாறு ஒலிம்பியாவில் நடைபெறும் குதிரை ரதப் போட்டியில் ஜெயித்தவனுக்கு உரிய பரிசையும் தனது பிரச்சாரம் நல்ல முறையில் நடைபெறுவதற்கான வாய்ப்பு வசதிகளையுங் கூடப் பெற்றிருப்பான் போலும், அந்த அளவுக்கு அவன் மீது புகழாரம் அணிவிக்கிறார் நீதிபதி!

“எதையும் ஏன் — எதற்கு என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்!” அன்றொரு நாள் இதைச் சாக்ரடீஸ் சொன்னான்.

ஏதன்சில் ஏளன ஒலி கேட்டது, கிரேக்கம் அந்தக் கிழவனைக் கொன்று போட்டது.

நாம் சொன்னோம்; எதையும்; ஏன் எதற்கு என்று கேள் என்பதாக! ஏறத்தாழ முப்பதாண்டுகளாக! எதிர்ப்பு மலையென வளர்ந்தது. அலை அலையாகப் பகை எழுந்தது.

“எதையும் ஏன் என்று கேட்பதா? அட நாத்திகப் பயல்களா? அடுக்குமா இந்த அக்ரமம். அப்படிக் கேட்க ஆரம்பிச்சா, ஆண்டவனுக்கு ஆலயம் ஏன்னு கேட்பனே! ஆறு கால பூஜை ஏன்னு கேட்பனே! அடியாருடைய அகமே ஆண்டவன் இருப்பிடம்-அப்படியிருக்க அரண்மனை போல வீடு எதுக்கு ஆண்டவனுக்கு? அப்படினனு கேட்டுத் தொலைப்பானே! மும்மலமுந் தீர்த்தவராச்சே ஆண்டவன்; அவர் முந்திரி, திராட்சை போட்ட பொங்கலும், மோதகமும் கேட்பானேன்னு கேட்பனே கேடு கெட்டவன்! ஓய் குருக்கள் சாமிகளே! அர்த்த ஜாமத்திலே அம்மையப்பனுக்கு பூஜை ஏதுக்குங்காணும்; அம்மையைப் பள்ளியறையிலே வைத்துப் பூட்டிண்டு வர்றீரே எதற்குன்னு கேட்டு உயிரை எடுப்பனே உதவாக்கறைப் பயல்!

பகவான் படைச்ச வருஷம் மாசம் தேதியிலே நல்ல மாசம் கெட்ட மாசம்; பொருந்தும் தேதி பொல்லாத் தேதி இதெல்லாம் ஏங்காணும்னு எகிரிக் குதிப்பனே! எல்லார் தேகத்திலியும் ஒரே மாதிரி ரத்தம் தானே ஓடுது; இதிலே ஏனய்யா மேல்ஜாதி கீழ் ஜாதின்னு மென்னியை நெறிப்பனே! ஆகாதுங்காணும் ஆகாது! ஏன் எதற்குங்கிற கேள்வியே எழும்பக்கூடாது!”—

இதுபோல ஆவேசத் தாண்டவம் ஆடியது ஆரிய வட்டாரம்— ஏன், எதற்கு என்ற வினைக் குறியை நாம் வில்லாக்கிக் கொண்டபோது!

“ஏன் — எதற்கு? என்ற கேள்வி எழுவதா? என்ன பாதகம் இது! நமச்சிவாயம்—நமச்சிவாயம் — பசித்த வயிற்றுக்குக் கூழின்றிப் பதறும் பஞ்சைகளின் பட்டாளம் அணிவகுத்து நிற்கும் நாட்டில்—பால், பழம், பல்லக்கு, மேலே மதி—மடியில் ரதி என்ற விதத்தில் உருண்டுகிடக்கும் மத குருமார்களுக்கு நாட்டிலே செல்வாக்கு ஏன்; என்ற கேள்வி கிளம்பிவிடுமே—அறவே ஆகாது —எதுவுமறியாத ஏழை பாழைகள்—ஏனோ தானுக்கள்—எம்மை எம்பொருமானின் திருத்தூதுவர் என எண்ணியிருக்கும் இளிச்சவாயர்கள் — விழித்துக் கொள்ள வழி காட்டிவிடும், இந்த “ஏன்” என்ற வினைக்குறி! முக்காலும் தீதான கேள்வி — ஒருக்காலும் அனுமதியோம்!” என தண்டு கமண்டலங்களோடு புறப்பட்டன மடாலயங்கள்; நாம் ஏன், எதற்கு என்ற “மந்திரத்தை” மக்களிடம் பரப்பத் துவங்கியவுடன்!

“என்ன கொடுமை! ஏன் என்று கேட்கத் தூண்டுகிறார்களா? - அய்யோ—அப்படியெல்லோரும் கேட்க ஆரம்பித்தால், நமது படாடோபவாழ்வு என்னுவது? சேவலோடு விழித்து, சிவப்பு வானம் வெளுத்து — பிறகு சிவக்கும்வரையில் செந்நெல் மணி விளைக்க வியர்வை சிந்துகிறானே உழவன்; அப்படி உழைப்பது தலைவிதி என்று எண்ணிக்கிடக்கிறாளே அவன் மனைவி-அவர்கள்எல்லாம் ஏன் இப்படி நாம் மாத்திரம் உழைக்கவேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டால், நமது சிங்காரப் பொன்வாழ்வு சாம்பற் காடாகிவிடுமே! — உழைக்க ஒருவன், கொழுக்க ஒருவனா? ஏன்—எதற்கு?-என்று கேட்பானே. குடல் செத்த கூனன்! கூனன் நிமிர்வதா? குருடன் கண் பெறுவதா? கூடாது கூடாது! பின் கூட கோபுரங்களில் நாமும், குப்பை மேடுகளில் அந்த மனித நாய்களும் என்ற நிலை மாறிவிடும் “ஏன்” என்ற கேள்வி ஒழிக! ஒழிக!!”;—ஆதிக்க புரியினர் அலறினர், நமது அம்புகள் பறக்கக் கண்டு!

இப்படியொரு காலமிருந்தது— இன்னுங்கூட இருக்கிறது-மதுரை நீதிபதி இதை நன்றாக அறிவார்.

அறிந்தும், அவரே கூறுகிறார்; எதையும் ஏன், எதற்காக என்று கேட்கும் சாக்ரடீசின் பண்பு வளர வேண்டும் என்று!

நாம் வெற்றி பெற்று வருகிறோம் என்பதற்கு நல்ல சான்று மதுரை நீதிபதியின் குரல்.

நீதிபதி பேசியிருக்குமிடம் மதுரைத் தியாகராசர் கல்லூரி மாணவர்களின் முன்னிலையில்! அறிவுச் சுடர் விளக்கை ஏந்தி நிற்கும் இளந்தோழர்கள் முன்னிலையில்! பேசிய நேரமோ— பிப்ரவரி 29ம் நாள்! சாக்ரடீசைப் பற்றி அவர் நினைக்கக் காரணமாக இருந்ததோ; பிப்ரவரி 25-ம் நாள் வெளியான

**“ராஜா ராணி” படம்!**

இந்த நிலைமையை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் அவரது பேச்சின் நோக்கமே வேறு என்றும் எண்ண வேண்டியிருக்கிறது.

“ஏன் எதற்கு என்று ஆராய்ந்து பார்க்கும் தன்மையை வளர்க்க முற்படும்போது ஆழ்ந்த கருத்துக்கள் இல்லாது-வெறும் அடுக்கு மொழிகளை மட்டுமே பயன்படுத்துவது சிறந்ததல்ல!”

இது நீதிபதியின் கருத்துரை. இப்போது புரிகிறதா; இருபத்தொன்பதாம் தேதிக்குக் காரணம் இருபத்தைந்தாம் தேதிதான் என்ற ரகசியம்!

இன்னொரு ரகசியங்கூட இருக்கலாம் என்று தோன்றுகிறது - ஒரு வேளை நீதிபதி ரங்கராசன் அவர்கள் “அவாளை”ச் சேர்ந்தவரோ என்னவோ? (இதற்கு மதுரைத் தோ... கள் உண்மை விளக்கம் தருவா... களாக!”)

# இரு நீ...

‘ராஜா ராணி’ படத்தில் வ... சாக்ரடீஸ் நாடகத்தைப் பழித்... பேச வேண்டும் என்கிற ஒ... காரணத்திற்காகவே நீதிப... அவர்கள் —மாணவர்களு... அறிவுரைதரும் நோக்கில் சா... டீசின் பண்பைப் பாராட்டி, ஏ... —எதற்கு என்ற கேள்விகளை... புகழ்ந்தார் என்றால் அதிலு... நமக்கு லாபமே இருக்கிறது—... தேவர்களாலும் ‘சாக்ரடீ... பாராட்டப் படுகிறான் என்... போது நமது பணிக்கு உரிய ... னைப் பெற்றதாகவே எண்ணி... பரவசமடைகிறோம்.

இரும்பு நெஞ்சன் ஸ்டாலி... என்றால்—அவனை இரும்பா... தான் செய்து வைக்கவேண்டு... தவிர—இப்படி பளிங்கிலே... செதுக்கி வைக்கக்கூடாது என்... சிற்பியிடம் அபிப்பிராயம் தெ... விப்பது சிரிப்புக்குத்தான் இ... மாகும் என்பதை நீதிபதி அறிய... தவரல்ல!

சாக்ரடீசின் எண்ணங்க... அழகான தமிழில் — (நீதிப... பேச்சுப்படி அடுக்குச் சொ... களில்) வடித்துத் தருவது எப்ப... குற்றமாகுமோ புரியவில்லை... தீராத வியாதியைத் தீர்க்கு... மருந்து! அதைத் தேனில் குழை... துத் தருகிறான்; மருத்துவன்... இது தவறா?

நாடகத்திலே சாக்ரடீசின்... ஆழ்ந்த கருத்துக்கள் எது... மறைக்கப்பட வில்லையே—... சார் போர்டு சாஸ்திரியாரின்... தரிக்கோலுக்கு சில கருத்துக்க... இரையாகி விட்டன. படத்தி... வராத பல கருத்துக்கள் “... சொலி” பொங்கல் மலரில் இ... பெற்றிருக்கின்றன. படத்தி... காணப்படும் எந்தக் கருத்... அடுக்குச் சொல்லால் பாழாகி... என்று நீதிபதி எண்ணுகிறார்!

“அறிவு! அறிவு! அகிலத்த... எந்த மூலையி லிருந்தா... அதைத் தேடிப் பெற உங்... எல்லாம் அழைக்கிறேன் “... னையே நீ அறிவாய்!” ... உபதேசத்தின் உண்மை... உணர்வதற்காகத்தான் ... உயிரினுமினியவர்களே! ... களை பெல்லாம் அ... கிறேன்.”

# ...திகள்!

...து நாடகத்தில் சாக்ரடீஸ் ...வுரை—இதை எப்படி அமை ... வேண்டு மென்று நீதிபதி ...ம்புகிறார், "சென்ற விட ...ல்லாம் அறிவு கொளுத்து ... சாக்ரடீசின் பண்பாக ...ந்தது" என்று கூறுகிறார் ...தி! மேலே கண்ட உரையி ... அவர் கூறும் பண்புதானே ...க்கப்பட்டிருக்கிறது. எந்த ...றையில் அந்தப் பண்பு விளக் ...ட வேண்டும்? ஒரு வேளை ...படி இருக்க வேண்டு மென்று ...ர் நினைக்கிறாரோ?

அதாவது,

"...கோவாரும் என் ஆத்மார்த்த ...சுவாசமுள்ள யுவர்களே! ...ட்சண்யமானபுத்தி! தீட்சண்ய ...ான புத்தி!! அந்த புத்தி தீட் ...ண்யத்தை இந்த ஆதிசேஷன் ...மக்கும் அண்ட சராசரங்களி ...லும் தெக்ஷிண — உத்திர — ...சான்யம் ஆகிய நம் திருஷ் ...ப்படும் ஸ்தலங்களிலும் யாத் ...திரை செய்து தரிசிப்போம்!" ...து போல இருக்க வேண்டு ...ன்று விரும்புகிறார் போலும் ...தி!

...ரம் விலை போகாது; விவேகம் ...ணைக்கு வராவிட்டால்—தீட் ...ய வாளும் தினவெடுத்த ...தாள்களிலே தூக்கிய ஈட்டி ...ம் மட்டும் போதாது தீரர் ...ளே!—இதோ, நான் தரும் ...அறிவாயுதத்தையும் எடுத்துக் ...கொள்ளுங்கள்!"

...இதிலும் வெறும் அர்த்தமில் ...த அடுக்குச் சொற்கள் ...டுமே இருப்பதாகக் கருது ...ரா—நீதிபதி அவர்கள்! ...அவர் சொன்னார் இவர் சொன் ...னார் என்று நம்பி அறிவிழந்து ...தடுமாற்றம் அடைய வேண் ...டாம்—எவர் சொன்ன சொல் ...லானாலும் அதனையுந்தன் இயல் ...பான பகுத்தறிவால் எண்ணிப் ...பார்ப்பாய்!'

...படத்திலே வரும் சாக்ரடீஸ் ...ன் இப்படி பேசுகிறான்— ...துவே அவனது மூலமுழக்கம்... ...தையும் ஆதார பூர்வமாக ...றுக்கத் துணிகிறாரா நீதிபதி!

...தியாகராசக் கல்லூரி மாண ...ர்கள் நீதிபதியின் பேச்சைக் ...கட்டிருப்பர்—"எதையும் ஏன், ...தற்காக என்று கேட்க வேண் ...டும்!" என்பதை அவர் ஞாபகப் ...படுத்தினரே; அதைப் போலவே அந்த மாணவர்களும் ஞாப கப்படுத்திக் கொண்டிருப்பர்,

"ஏன் நீதிபதி இப்படிப் பேசினார்—? எதற்காக இப்ப டிப் பேசினார்?" மாணவர்கள் உள்ளம் கேள்விக்களமாக மாறி யிருக்கும் — இறுதியில் விடை கிடைத்திருக்கும்—சாக் ரடீசை, ஒரு சர்மாவோ சாஸ் திரியோ எழுதி — "சோக் ரத முனிவாக" மாற்றி யிருந்தால் நீதிபதி அப்படிப் பேசியிருக்க மாட்டார் என்ற தெளிவும் பிறந்திருக்கும்அந்த இளஞ் சீயங்களுக்கு!

எப்படியோ நீதிபதி ஒருவரின் வாயினல் 'சாக்ரட்டீஸ்' குற்ற மற்றவன் என்று கூறப்பட்டு அவன் பரப்பிய கொள்கைகளும் வரவேற்கப் படுகிறது என்கிற போது, நம்மீது மறைமுகமாகப் பாய்கிற கணைகள்கூட அதிக வலியைத் தருவதில்லை; மாறாகப் புதிய வலிவைத் தருகிறது என மகிழ்கிறோம்.

★

மதுரை நீதிபதி சாக்ரடீசை மாணவர் மத்தியில் பெருமைப் படுத்துகிறார், இதோ கோவை நீதிபதியின் குரல் கேட்கிறது கவனியுங்கள்!

மாணிக்க வாசகர், திருவாச கம் பாடிய தேவர் எனப் புகழப் பட்டவர். திருவாசகத்துக்கு உரு காதார் ஒரு வாசகத்துக்கும் உரு கார் என்ற உயர்வு பெற்றது அந்த ஏடு! தில்லைத் திருப்பதி யானே அடியெடுத்துக் கொடுக்க தித்திக்கும் தமிழில் தேன்பாக் களை அள்ளிக் கொட்டினர் அருமை மணிவாசகர் என்பர் அடியார்க்கும் அடியார்கள்!

குதிரை வாங்கக் கொற்றவன் பணம் கொடுத்து அனுப்பினன் அந்தப் பணத்தைச் செலவழித்துக் கோயில் கட்டிக் குதூகலித்தார் மாணிக்கவாசகர் என்று திருத் தொண்டர்கள் திருவாய் மலரு வர்! நரி பரியான படலம் போல் அதி ருசியான படலம் எதுவு மில்லையென்று காலக்ஷேப பாக வதர்கள் அதிரசத்தைப் பிட்டு வாயில் திணித்துக் கொள்வார் கள்! நால்வரில் ஒருவரன்றோ நமது மாணிக்கவாசகப் பெரு மான்—என நாவார, மனமாரத் துதிப்பர் நாடு மறந்து, 'மேல்வீடு' நோக்கியிருப்போர்,

"தேசத்துப் பாதுகாப்புக்காக குதிரை வாங்கப் பணம் கொடுத் தால் தேவாலயம் எழுப்புவது தான் முறையா? என நாம் கேட் டோம்."

"கெடுமதி இவர்களுக்கு" என்று சுடு மொழி கொட்டினர்.

அறிஞர் அண்ணு தீட்டிக் காட்டினர், அருமையான சிறு நாடகம், "வழக்கு வாபஸ்" என்ற பெயரில்!—மாணிக்கவாச கர் குற்றவாளி — அரசாங்கப் பணத்தை மோசடி செய்தவர்— என்று அறிவு மன்றம் தீர்ப்புக் கூறியது.

"அபாண்டம்! அக்ரமம்!" என்ற கூச்சல் சைவ சமய இருட் டறைக்குள்ளே யிருந்து கிளம்பி யது!

இப்போது இதோ, நீதிபதியே பேசுகிறார்; நீறு பூசிகளே! நிதான மாகக் கேளுங்கள்!

"திருவாசகம் பாடிய மாணிக்க வாசகர் இப்போது இருந் திருந்து, பரிவாங்கத் தந்த பணத்துக்கு அவர் ஆலயம் எழுப்பியிருந்தால் அவர் "நம் பிக்கைத் துரோகி!" என்று குற்றம் சாட்டப்பட்டு இரண் டாண்டுக் கடுங்காவல் தண் டனை விதிக்கப்பட்டிருப்பார்."

என்று வேடிக்கையாக கோவை மாவட்ட மாஜிஸ்டிரேட் திரு. பி. எஸ். சோமசுந்தரம் குறிப் பிட்டார்.

"தமிழ்நாடு" பிப்—28.

வேடிக்கையாகக் குறிப்பிட்டார் என்று 'தமிழ்நாடு' இதழ் தலைப்பு தருகிறது—பிறகென்ன; வேடிக் கை யில்லாமல் உண்மையாகவே குறிப்பிட்டு, மாணிக்க வாசக ரைக் கூப்பிட்டு விசாரிக்கப் போகி றார் என்றா நாமோ. நாடோ கருத இயலும்!

வேடிக்கையாகத்தான் குறிப் பிட்டார்—ஆனல், விபூதி பக்தர் களின் விலாவிலே வேல் பாய்ந் தது போன்ற உணர்ச்சி ஏற்பட் டிருக்கும். பாவம், துடித்துத் துவண்டு போயிருப்பர்! — இரு நீதிபதிகள்—ஒருவர் மதுரை— மற்றவர் கோவை—ஒருவர் அப் படி — (?) ஒருவர் இப்படி (!)

மதுரையார், சாக்ரடீஸ்மீதுள்ள வழக்கை அப்பீலில் தள்ளுபடி செய்து, அவனை விடுவிக்கிறார்— கோவையார் — விடுதலையாகி வெண்ணீறு பூசி வீதி உலாவரும் மாணிக்கவாசக சாமிகளை மீண் டும் கூண்டிலேற்றுக — இரண் டாண்டு கடுங்காவல் தண்டனை தருகிறேன், மோசடிக் குற்றத்திற் காக—என்று மொழிகிறார்!—

இரு நீதிபதிகள்—எக்காரணம் பற்றியோ நம் இலட்சிய கீதத்தில் ஒரு வரியைப் பாடிக் காட்டி யிருக்கிறார்கள்.

மதுரையார் பாட்டில் சிறிது சுருதி தப்பியிருக்கிறது!

கோவையார் குரலில் கம்பீரம் நிறைந்திருக்கிறது!

தாயகமே! நீ தாளம் தவறாமல் முழுப்பாடலையும் எப்போது பாடப் போகிறாய் என்று கேட்கத் தோன்றுகிறது எனக்கு!

★

ஏப்ரல் முதல் வாரத்தில்
ஆரம்பமாகிறது!

# வெள்ளிக்கிழமை

## மு. கருணநிதி

— எழுதும் —

உணர்ச்சிமிக்க தொடர் சித்திரம்.

★

(தேவையான அதிகப் பிரதிகளுக்கு ஏஜண்டுத் தோழர்கள் முன் கூட்டியே அறிவிக்கவும்.)

★

அடுத்த இதழில்

★

"தாய்மை"

★

மு. க. தீட்டும்

சிறுகதை

## தாழம்பூ...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

வரவேற்கும் நிலையிலே தவித்துக் கொண்டிருக்கிறது.

என் நிலே! கிருஷ்ணு தான் எழுதியிருந்தாளே—கொடுத்து வைத்தவளடி நீ என்று, ஆமாம்; கொடுத்து வைத்தவள்தான்! இதய சாம்ராஜ்யத்திலே குடியேறிவிட்ட டாக்டராம்! கிருஷ்ணு மட்டுமா ஊர்கூட இப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறது; குணவதி கொடுத்து வைத்தவள்; அய்யோ தெய்வமே! பெரிய இடத்துக் குமுறல்கள் — மற்றவர்களுக்குக்கீதமாகத்தான் கேட்குமோ? அந்தஸ்து மாளிகையிலிருந்து எச்சில் துப்பினுலும், திராட்சை ரசம் உமிழ்வது போலத்தான் மற்றவர்களுக்குத் தெரியுமோ என்னவோ!

படித்தவள் கிருஷ்ணு — அவளே, நான் பரவச வாழ்வு நடத்திக்கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிருளே பேதைப் பெண்! நான் புரளும் மஞ்சத்தில் காது வைத்துக் கேட்டால் - நான் முகம் புதைத்து அழும் தலையணையின் இதயத்தைத் தட்டினுல் - ஆயிரம் துயரக் கதைகளைக் கண்ணீர் விட்டபடி சொல்லுமே! இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது. ஊருக்குப் பெரிய மனிதர்; 'கொடுத்து வைத்த குணவதி'க்குக் கிடைத்த நாயகன்! பிரபல டாக்டர், அவர் மனைவி நான்! யார்தான் சொல்லமாட்டார்கள்— குணவதி கொடுத்து வைத்தவள் என்று! அதனுல்தான கிருஷ்ணுவின் கண்களுக்கு நான் தூரத்துப் பச்சையாக காட்சியளிக்கிறேன்; இதற்கு மேல் என்னுல் ஒன்றும் சிந்திக்க முடியவில்லை; ஒரே குழப்பம்; இதயத்திலே புயல்! ஆம் கோரப் புயல்! தலை கனத்தது-தலையணையில் முகம் புதைத்து தேம்பித்தேம்பியழுதேன்! எப்பொழுது தூக்கம் என்னைத் தழுவிக் கொண்டதோ எனக்கே தெரியாது; நன்ருக உறங்கிவிட்டேன்.

★

ஒரு நாள் கிருஷ்ணுவிற்கு கடிதம் ஒன்று வந்தது. 'உலகத்தையே தத்துவ உருண்டையாக கண்டுகொண்டிருக்கும் உன் கண்களுக்கு நான் தூரத்துப் பச்சையாகத் தோற்றமளிப்பதில் வியப்பொன்றுமில்லை; எல்லாப் பெண்களுமே, அக்பர் சக்ரவர்த்தியின் அத்தாணி மண்டபத்து ஆடலழகிகளாக வேண்டுமானுல் இருக்கலாம்—ஆனுல் சலீம்கள் நூர்ஜகான்களைத் தேடாமல் இருந்திருந்தால்—சரித்திரமே மாறியிருக்குமே! பழகப் பழகத்தான் வாழ்க்கையே ஒரு கள்ளிக் காடாக இருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது; அந்தக் கள்ளிக் காட்டை, கல்-முள் படாமல் கடந்து செல்வதென்ருல் சிரமம் தான். சகோதரி! வாழ்க்கையில் எல்லாப் பெண்களுமே உன்னைப் போல மல்லிகைப் பூவாக இருக்க முடியுமா? நீயும் மணக்க—உன்னுடன் இணைந்துவிட்ட உன் கணவரும் மணம் வீச: கிருஷ்ணு எனக்கு பொருமையாகக்கூட இருக்கிறது, உங்கள் குடும்பமே ஒரு மல்லிகைப் பூமாலையாகத்தானே இருக்கிறது!

ஆனுல் சுகுணுவின் நிலே! என்ன குறை வந்துவிட்டது அவளுக்கு; அவள் மாம்பழக் கன்னங்களும், மாதுளைஇதழும்-அப்பப்பா! பெண்களாகப்பிறந்துவிட்ட நமக்கே மயக்கம் கொடுத்ததென்ருல் — ஆண்களைப் பற்றி சொல்லவா வேண்டும்! ஆனுல் இன்று அவள் ஒரு எருக்கம் பூவாகிவிட்டாள். எதற்கும் பயன்படாமல் போய்விட்டாள்; அவள் பெண் மனமே செத்துவிட்டதாக எழுதியிருந்தாய்!

இங்கு மட்டும் என்ன வாழ்கிறதாம்; கிருஷ்ணு, எப்படியடி சொல்வேன் அந்த மானக்கேட்டை! வேண்டாம்; அந்த பயங்கர ரகசியம் என்னோடு செத்து விடட்டும். சகோதரி. கண்ணீரால்— இல்லை இல்லை; என் கண்ணிலே வழிந்துகொண்டிருக்கும் ரத்தக் கண்ணீரால் எழுதிக்காட்ட வேண்டுமடி அந்தக் கதையை!

சிறு வயதில் அடிக்கடி தாழம்பூ வாங்கி சூட்டிக் கொள்வேனே, உனக்கு நினைவிருக்கிறதா? ஆனுல் இன்று நானே தாழம்பூவாக மாறிவிட்டேன்! என் உடம்பெல்லாம் கூறிய முட்கள்! 'என் இதய சிம்மாசனத்திலே குடியேறிவிட்டவன்' என்று குறிப்பிட்டிருந்தாயே. அவர் என் கணவரல்ல; இந்தத் தாழம்பூவின் நிழலிலே தலை வைத்து உறங்க வந்த கட்டுவிரியனடி கிருஷ்ணு — கட்டுவிரியன்! அந்த நாகத்தின் கொடிய விஷம், என் உடம்பெல்லாம் பூசப்பட்டுவிட்டது; நாசமாக்கப்பட்டேன்; ஆனுலும் தாழம்பூவாயிற்றே நான்தான்! அந்த மணம் மட்டும் இன்னும் போகவில்லை; ஆமாம்; நான் இன்றுகூட ஒரு பெரிய இடத்துச் சீமாட்டி என்றுதான் ஊர் பேசிக் கொள்கிறது; இதற்குமேல் என்னுல் ஒன்றும் எழுதமுடியவில்லை; கண்ணீர் திரை போடுகிறது.

உன் அன்புள்ள,
குணவதி,

★

கிருஷ்ணுவிற்கு தூக்கி வாரிப் போட்டது; மாணிக்கக் கல் என்று கருதியது, கண்ணுடிக்கல்லாகி விட்டதே என்று துடிக்கிட்டாள்; காரணம் புரியவில்லை; அதற்குப் பிறகு எத்தனையோ கடிதங்கள் எழுதினுள் கிருஷ்ணு; ஒன்றுக்கும் பதில் வரவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு தந்தி ஒன்று வந்தது, கிருஷ்ணுவின் இதயத்தில் நெருப்புக் குழம்பை வாரிக் கொட்டுவதற்கு! ஆம், குணவதி இறந்துவிட்டாளென்று!

★

கிருஷ்ணு காற்றெனப் பறந்து சென்ருள் தோழியின் பிணத்தையாவது ஒரு முறை பார்த்து விடுவோம் என்று; ஊரை நெருங்கும் பொழுது, மயானத்திலே எழுந்த புகை மண்டலம் வானத்தை நோக்கித் தாவிக் கொண்டிருந்தது. இருளோடு இருளாய் கலந்துவிட்டாள், கருகிப் போனவள் குணவதி என்பதறிந்து கண் கலங்கினுள் கிருஷ்ணு.

குழப்பமடைந்திருந்த கிருஷ்ணுவிற்கு குணவதியின் வேலைக்காரி தந்த விளக்கம் இதுதான்:

குணவதியின் கணவர் டாக்டர் சந்திரன்; குதிரைப் பந்தயத்தில் சொத்தெல்லாம் பறி கொடுத்துவிட்டார்; அந்தஸ்து மாளிகையில் இருந்து இறங்கிவாழ விரும்பவில்லை. குணவதியை — முதலாக வைத்து, வியாபாரம் ஆரம்பித்தார்; இரும்பகை நாயனுராக மாறினுர்! ஆண்களின் மிரட்டலுக்கும் புரட்டுக்கும் எத்தனைகாலந்தான் பெண்கள் அடங்கிக் கிடப்பது? துணிந்து ஒரு முடிவிற்கு வந்தாள்; ஒரு நாள் சந்திரனுக்கு கொடுத்த காபியில் விஷப் பொடி கலந்து விட்டாள் குணவதி; அதை மேஜை மேல் வைத்துவிட்டு முகம் கழுவச் சென்ற டாக்டர் திரும்பி வந்து பார்த்த போது காப்பியில் ஒரு ஈ விழுந்து செத்திருந்தது, வேறு காப்பிக்காக குணவதியை அழைத்தார் சந்திரன்; விஷம் கலந்த காப்பியைக் கொடுத்துவிட்டு அடுக்களையில் ஒளிந்தபடி பார்த்துக் கொண்டிருந்த குணவதி—சந்திரன் அழைப்பதைக் கேட்டு, விஷம் கலந்து விட்ட செய்திதான் ஒருவேளை தெரிந்து விட்டதோ என்று அஞ்சி — ரிவால்வரால் சுட்டுக் கொண்டு ரத்த வெள்ளத்திலே மிதந்தாள். பெரிய இடத்து விஷயம் போலீசுக்கு எட்டவில்லையம்மா, ஊர்வாய் மூடப்பட்டது; குணவதியம்மா மார் அடைத்து செத்தாள் என்று செய்தி பரப்பப்பட்டது; இதுதானம்மா கதை! என்று கண்ணை கசக்கியபடியே சொன்னுள் அந்த வேலைக்காரி!

கிருஷ்ணுவின் நெஞ்சம் எரிமலையாயிற்று; தத்துவம் நிழலாடும் அவள் விழிகளில் முத்து முத்தாகக் கண்ணீர் அரும்பிற்று.

ஒய்யாரமாக நின்றுகொண்டிருந்த அந்த மாளிகையைத் திரும்பிப் பார்த்தாள். டாக்டர் சந்திரன் எம். பி. பி. எஸ். என்று தொங்கிக் கொண்டிருந்த அந்தப் பலகை, 'மானங்கெட்ட ஒரு மனிதன் இங்குதான் வாழ்ந்து கொண்டிருக்கிருன்' என்று வருவோர் போவோருக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தது!

★

## கடிவாளம் அங்கே!

''ஒரு பெரிய நிலப்பரப்பை ஒரே மத்திய ஆட்சியின் கீழ் கட்டுப் படுத்தி ஆள்வதென்பது இயலாத காரியம். அப்படி ஏகாதிபத்திய நோக்கோடு அடக்கி ஆண்டாலும்; அத்தகைய ஒரு மத்திய ஆட்சியின்கீழ் வாழும் எல்லா குடிமக்களுக்கும் சமமான நீதி கிடைக்காது'' அடிமைத்தனத்திற்கெதிராக முஷ்டியை உயர்த்தி, நாடு மக்களுக்காக—மக்கள் நன்மைக்காக என்று அமெரிக்க நாட்டிலே குரலெழுப்பிய ஆப்ரகாம் லிங்கனின் கருத்துக்கள்தான் மேலே தரப்பட்டிருப்பவை. மொழி வழி பிரிந்து வாழ நினைப்பதுகூட குறுகிய நோக்கம் என்று குற்றம் சாட்டும் 'பாரத ஜோதி'யின் சாககார், காந்தியாரின் மாணிக்கக் கொள்கைகளையே குழிதோண்டி புதைத்துவிட்டு, கோலோச்சிக் கொண்டிருக்கும் பொழுது, லிங்கனின் கருத்துக்கு எங்கே இடமளிக்கப் போகிருர்கள்!

ஒரு பரந்த நிலப்பரப்பை ஒரே மத்திய ஆட்சியின் கீழ் கொண்டு வருவதென்பது இயலாத காரியம். அதைவிட, அத்தகைய ஒரு மத்திய சர்க்காரின் கீழ் வாழ்கின்ற எல்லாக் குடிமக்களுக்கும் சமமான நீதி கிடைக்காது! நீண்ட நாட்களுக்கு முன்னுல் சொல்லிவிட்டுச் செத்தார் லிங்கன். ஆனுல் நாமோ தொடர்ந்து குரலெழுப்பி வருகிறோம்! ஊர் தூங்கும் நள்ளிரவில் உரிமை வாங்குவதாக சொல்லி, செங்கோலை வெள்ளையனிடமிருந்து பறித்துக்கொண்ட 'துரை'மார்கள் நடத்துகின்ற 'சுதந்திர' சர்க்காரிலே எத்தகைய நீதி வழங்கப் படுகிறது? மாற்ருந்தாய் மனப்போக்கிலே, டில்லியை மத்திய பீடமாக வைத்துக் கொண்டிருக்கும் சர்க்கார், தென்னகத்தை எந்த நோக்கோடு கவனித்து வருகிறது என்பதையும்; பல பல மேடைகளில் பேசியும், ஏடுகள் மூலம் எழுதியும் விளக்கம் தந்து வருகிறோம்.

வடக்கு வேறுதான்; தெற்கு வேறுதான்! வடநாட்டு மனிதர்கள் தென்னகத்தைப் புறக்கணிக்கிருர்கள் என்பதை மித்திரன் ஏடு சித்திரம் போட்டு விளக்கவேண்டிய சூழ்நிலைக்கு டில்லி வட்டாரம் 'மனிதாபிமானத்தின் குரல்வளையை நெறித்து வருகிறது!

பரந்த நிலப்பரப்பான இந்திய உபகண்டத்தில், டெல்லியைப் பீடமாகக் கொண்ட நேரு சர்க்கார்; எல்லா மாநிலத்தோர்க்கும் சமமான நீதி வழங்கவில்லை என்பது மட்டுமல்ல குறிப்பாக தென்னகத்திற்கு—திராவிடத்திற்கு மட்டும் நியாயமான கோரிக்கைகளைக் கூட புறக்கணிக்கின்ற அளவிற்கு அலட்சிய மனப்பான்மை குன்றென வளர்ந்து நிற்கிறது. இந்தக் கொடுமையைக் கண்டு ஆந்த வட்டாரத்திலேயே இருக்கும் சில 'பெரிய புள்ளி'களின் நெஞ்சம் எரிமலையெனக் குமுறிக் கொண்டிருப்பதை நாளேடுகளில் தொடர்பு கொண்டோர் அறியமுடியும். சென்றகிழமை சென்னை சட்டசபையில் திரு. எம். ஏ. முத்தையா அவர்கள் தம் குமுறலை வெளியிட்டிருக்கிருர்

''புயலால் பாதிக்கப்பட்டோருக்கு. சென்னை சர்க்கார் தரும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. பீகாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள ரூ. 200-வரை தரப்பட்டதாக தகவல் கிடைத்திருக்கிறது; சென்னை சர்க்கார் ரூ. 30 மட்டுமே தருகிருர்கள், பீகாரில் தருகிற அளவு தராவிட்டாலும், இன்னும் சற்று அதிகமான அளவு தரப்பட வேண்டும்!''

பீகாரிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.200!

ஆனுல் இங்கோ 'பெரியமனதுடன்' தரப்படுவது ரூ. 30!

இரண்டிறகும் ஒரே மத்திய சர்க்கார்! எங்கே எதிர்பார்க்க முடிகிறது சமமான நீதியை. மத்திய சர்க்காரின் பார்வைதான் ஓரவஞ்சனை நோக்கோடு இருக்கிறதென்ருல்; சென்னை சர்க்காரின் விழிகளுமா இருண்டுவிட்டன?

இவர்கள் என்ன செய்ய முடியும்—கடிவாளம் டில்லி மூலவர்களிடம் இருக்கும்போது!

அதன் விளைவுதான், அங்கே 200! இங்கே 30!

எப்படி எதிர்பார்க்க முடியும் நல்ல தீர்ப்பை!

# திரையில்-தேவ லீலைகள்!

"சோற்பதம் கடந்த அப்பன்;

தாள தாமரைகள் ஏத்தி
தடமலர் புனைந்துறையும்
ஆளலாதவரைக் கண்டால்
அம்ம! நாம்அஞ்சுமாறே"

தெருவெல்லாம் பக்தி வெள்ளத்தை புரண்டோடச் செய்யும் திருவாசகம்பாடிய சிவநேசருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிதான்; மேலே பாடலாக உருவாகி யிருக்கிறது.

மேலே நாட்டிலே கொள்கைக் குழப்பமடைந்த ஒருவன் சொன்னும், 'ஆண்டவனுக்கு நான் அஞ்சுகிறேன்; அதைவிட, ஆண்டவனுக்கு அஞ்சாதவனைக் கண்டும் நான் அஞ்சுகிறேன்' என்று! இதே கருத்தினைதான்; மாணிக்கவாசகர் சுருதி மாற்றி பாடியிருக்கிருர்.

'தடமலர் புனைந்துறையும்
ஆளலாதவரைக் கண்டால்'

அம்ம! அச்சம் மேலிடுகிறதாம்! காலம் கெட்டுவிட்டது என்று கதறும் 'குழப்பவாதி'களுக்கு இந்த இடத்திலேயே ஒன்றை நினைவு படுத்த நாம் கடமைப் பட்டிருக்கிறோம்;

ஆண்டவனுக்கும் அஞ்சாத 'அழகிரிகள்' அந்தக் காலத்திலேயே இருந்திருக்கிருர்கள்; அதன் விளைவுதான்; திருவாசகம் பாடியவரை, திகைப்பும்; திகிலும்; சூழ்ந்து கொண்டிருக்கிறது;

'அம்ம!' என்ற ஒரு 'விளி'யைப் போட்டு, அடியாரை அலற வைத்திருக்கிறது;

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பக்தர்களின் கண்களுக்கு, 'அவனிடம்' நம்பிக்கையில்லாதவர்களின் நடமாட்டம்; கலக்கத்தையும்—குழப்பத்தையும் உண்டாக்கி விடுகிறது;

'அந்த' சக்தியையும் மறுக்கும்; 'இந்த' சக்திகள்: புகையும் எரிமலைகளாக, பூகம்பமாக; தோற்றமளிக்கிருர்கள்;

இதன் விளைவாக, மெய்யன்பர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சி, குழப்பமாகி, குதர்க்க வாதங்களில் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களை அறிவுலகின் கேலிச் சிரிப்புக்கும் கண்டனத்திற்கும் ஆளாக்கி வருகிறது:

பக்தர்கள் கசிந்து, கண்ணீர் மல்க; பரமனிடம் உருகி நிற்கும் பாணியே அலாதியானதுதான்!

'படியாய்க் கிடந்து உன் பவள வாய்க் காண்பேனே என்றுர்! ஒருவர்; 'பவளவாய்' தரிசனத்திற்கு படிக்கல்லாக மாறிவிடவும் தயாராகி விடுவாராம்! அதுவும் உமா தேவியாரின் பவள இதழ் காண்பதற்கு!

'மோகன நடை நடந்து முருகவேள் வந்தான்! மோக இசை பாடி முத்து மழை பொழிந்தான்! தாகமுடன் என் கையை தாவிப் பிடித்திழுத்தான், தஞ்சமென்றே என்னை நெஞ்சமதில் அணைத்தான்'

மோக நடை! முத்த மழை! தாகமாம்; தாவினுனும்; பிடித்தானும்; இழுத்தானும்; அதோடு விட்டாரே அன்பர்! இழுத்தான்; இதழோடு இதழ் இணைத்தான்; அணைத்தான்...அம்மவோ! என்று அடுக்கிக் கொண்டே போகாமல் அந்த அளவில் மகிழ்ச்சிதான்!

பனித்த சடைக்கும், பவளநிற மேனிக்கும் ஏங்கியபடி (பக்தி உள்ளத்தோடுதான்) உருகி, உடல் கருகி உள்ளீரல் தாக்க, ஓயாமல் தவங்கிடந்த முனிபுங்கவர்களெல்லாம்: நாடினேன் — தேடினேன் என்றும்; ஆதியாய்—நாதமாய்—ஜோதியாய் — சுடராய்—என்றும்! அன்பாய் — அறிவாய்; என்றும் அலைந்து அலைந்து; கடைசியில்

கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்

என்ற ஏகோபித்த முடிவோடு; கைலயங்கிரியிலிருந்து — குனித்த புருவத்தினராய் இறங்கி வந்தனர் என்றுதான் புராணங்கள் செப்புகின்றன!

அகோர தவம் புரிந்தவர்கள்; உதிர் சருகையும் உலர்ந்த சக்கைகளையும் உண்டு காட்டிலே திரிந்த முனிவர்கள்; நெருப்பாற்றில் நீந்தவும்; நீர்மேல் நடக்கவும் புலன்களைக் கட்டுப் படுத்தியவர்கள்: பூமிக்குள் ஊணையும் உறக்கத்தையும் மறந்து தவங் கிடந்ததாகச் சொல்லப் பட்டவர்கள்; எல்லோருமே கடைசியில் உதட்டைப் பிதுக்கியபடிதான் ஒளிந்து கொண்டனர்!

ஏன்; ஆண்டவன் அந்தராத்மாவோடு நேருக்கு நேர் பேசுவதாக இங்குள்ள தேசிய ஏடுகளெல்லாம் எழுதி களிப்படைந்து கொண்டிருக்கும் பொழுதேதான்; பஞ்சமா பாதகம் செய்தவனுக்கும் வரக்கூடாத 'புற்றுநோய்' வந்து, ரமணரிஷிகளை விழுங்கி விட்டது!

இதெல்லாம் தெரிந்தவர்தான் குன்றக்குடி அடிகளார்; இருந்தும் கூறுகிருர்; ஆண்டவனோடு உறவு வைத்துக் கொள்ளுங்கள். என்று;!

"உறுதியான உள்ளத்தோடு இறைவனை வழிபட்டால், அவர் தானுக பரிந்து வருவார். நல்ல சிநேகிதர்கள் யாரும் கஷ்ட காலத்தில் பிரிய மாட்டார்கள்; இறைவனை நமது சிநேகிதர் ஆக்கிக் கொண்டால், அவர் என்றும், எப்பொழுதும் நம்முடன் இருப்பார்'

'இறைவனை அடைய தனி மேதை அவசியம் என்றும், திருஞானசம்மந்தர் போன்ற ஞான செல்வங்களால்தான் அவரை அடையும் வழிகளைச் சுட்டிக் காட்ட முடியுமென்றும்; உண்மை அடியார்களின் அவதிகளில் ஆண்டவன் பங்கு கொள்வார் என்பதைத் தான் கஷ்ட நிலையிலிருந்த குசேலருக்கு, கிருஷ்ண பரமாத்மாவாகவும்; பிட்டுவாணிச்சிக்காக மண் சுமப்பவனுகவும் வந்தார்; பிரார்த்தனைகளுக்குப் பலன் கிடைக்கவில்லை யென்றால், பொறுத்து நிறைவான பலன் கிடைக்கும்!"

காலம் கை கொட்டி சிரிக்கும் இத்தகைய வரண்ட கருத்துக்களைத்தான் திருவாய் மலர்ந்தருளியிருக்கிருர் அடிகளார்;

கடவுளைக் 'கம்ரேட்' கூடவுளாக்கிக் கொள்ள வேண்டுமாம்; அந்த பாக்கியத்தை — 'பெரிய இடத்துத்' தொடர்பை—அடிகளாருக்கே விட்டு விடுவோம்; சுக துக்கங்களில் அவரே பங்கேற்கட்டும்; ஆனால், அறிவு விளக்கம் பெற்று வரும் சமுதாயத்தில் இது போன்ற சாக்கடைக் கருத்துக்களை தூவ வேண்டாம் என்று மனிதாபிமானத்தோடு நினைவு படுத்த விரும்புகிறோம்; மதுரை சௌராஷ்டிர செகண்டரி பாடசாலையில் — இத்தகைய பட்டுப் போன கருத்துக்களைப் பொழிந்திருக்கிருர்;

அரும்பு நெஞ்சங்களில் மடமை வித்துக்களைத் தூவ முனைந்திருக்கிருர்; ஆஸ்திகத்தைப் பரப்புகின்ற 'திருத்தொண்'டிலே சிந்தையை செலவழிக்கும் சிவநேசர்!

காலை இளம் கதிர்பட்டு தலை தூக்கும் அழகு மலர்களில்; சேற்று நீரை அள்ளித் தெளிக்கிருர்; இளைஞர் தம் நெஞ்சங்களில் அரும்புவிடும் புதுமைத் தளிர்களை கிள்ள முனைந்திருக்கிருர் ஸ்ரீ-ல-ஸ்ரீ!

★

அறிவுக் கோயிலில் நாத்திகம் வளரக் கூடாது என்று குரலெழுப்பும் இவர்; ஆத்திக சாக்கடையின் அணை உடைப்பதேனோ? அறிவுலகம் இதைத்தான் கேட்கிறது;

பிட்டுக்கு மண் சுமந்த கதையும்—துரோபதைக்கு துகில் தந்த சம்பவமும்; பரவைநாச்சியாருக்கு தூதுபோன செய்தியும், மாணவர்களுக்கு என்ன நீதியைக் கற்றுக் கொடுக்குமோ, நாமறியோம்! அடிகளாரின் சிந்தனைக்குத்தான் வெளிச்சம்!

கிரேக்க மேதை பிளேட்டோ, இலக்கியங்களை விமர்சிக்கும் போது, ஓமரையும், இஸியட்டையும் காரசாரமாக கண்டித்திருக்கிருர்; காரணம்; 'கடவுளுக்குக் கூறப்படும் தன்மைகள் கண்யமான முறையிலே அவர்தம் இலக்கியங்களில் சித்தரிக்கத் தவறி விட்டார்கள் என்று!'

ஓமரையும், எஸியட்டையுமே மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தக் கூடாது என்று கண்டிப்பாக குறிப்பிடுகிருர் பிளேட்டோ; இலக்கியங்களில்வரும் கடவுளரே தவறு இழைத்திருக்கிருர்களே: நாம் செய்தால் என்ன என்ற நினைப்பு மாணவர்களின் நெஞ்சத்திலே வளர்ந்துவிடும்; பிறகு, 'தேவர் அனையர் கயவர்' என்ற நிலைதானே ஏற்படும் என்று விளக்கம் தந்திருக்கிருர்:

அதையேதான் நாமும் நெடுங் காலமாகக் குறிப்பிட்டு வருகிறோம். புராணங்களில் வரும்

தொடர்ச்சி 12-ம் பக்கம்

## ஆடுகிருர் அமைச்சர்!



ஆச்சாரியாரின் ஆலோசனைக்கேற்ப மந்திரி சுப்பிரமணியம் மீண்டும் மீண்டும் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை வற்புறுத்தி வருகிருர்.

# பாழ்! பாழ்!

'பாரத ஜோதியின்' சர்க்கார். எத்தகைய ஊழல்கள் மலிந்தது என்பதை எதிர் கட்சியினர் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் இல்லாத முறையில் சர்க்காரால் நியமிக்கப் பட்ட கணக்குத் தணிக்கை அதிகாரிகளே ஊழல் நாற்றம் தாங்க முடியாமல் உண்மையை வெளியிட்டு விடுகின்றனர்:

நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கும் இந்த ஊழல்களைப் பற்றி மக்கள் சபைகளில் உறுப்பினர்கள் கேட்கும் போதெல்லாம்; நொண்டிச் சமாதானம் கூறி, வாயடைத்து வருகின்றனர் :

இந்திய சர்க்காரின் ராணுவத் துறையிலே சகிக்க முடியாத அளவிற்கு வீண்விரயமும், ஊழல்களும்: மலையென வளர்ந்து கொண்டிருப்பதாகவும், மக்கள் வரிப் பணம் பாழாக்கப் படுகிறது என்றும். ராணுவ அதிகாரிகளும் சில தொழில் துறை நிபுணர்களும் நடந்து கொள்ளும் பொறுப்பற்ற தன்மையால், பலலட்சங்கள் கரியாகக்கப் படுவதாகவும்; மக்கள் சபையில் கணக்குத் தணிக்கை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது, சர்க்காரின் ஊழல்கள் வெளியாகி இருக்கின்றன.

ஏற்கெனவே உபரியாக இருந்துவரும் மோட்டார் வண்டிகளை வாங்கியதில் 7 கோடி ரூ. வீணாக்கப் பட்டிருக்கிறது.

பெட்ரோல் சேமித்து வைப்பதற்காக 7 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 16 டாங்குகளில் 12 டாங்குகள் உபயோகப்படவேயில்லை; மற்ற 4 டாங்குகளிலும் பெட்ரோல் ஆவியாகி விடுகிறது:

தகுதியற்ற ஏரோ எஞ்ஜின் பேரிங்குகளை வாங்கியதில் சர்க்காருக்கு 33,000 ரூ. நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

யுனைடெட் ஸ்டேட்சின் யுத்த உபரியிலிருந்து வாங்கப்பட்ட 241 பேரிங்குகள், அளவு சரியாக இல்லாத காரணத்தால் பயன் படாமல் போயிற்று — இதனால் 33,856 ரூபாய் வீணாக்கப் பட்டது.

இன்னொரு வேலை திட்டத்தில் 18 லட்சம் பெருமான சாமான்கள் வாங்கியதில் 10 லட்சம் பெருமானவைகள் மட்டுமே உபயோகத்திற்கு வந்தன.

ஒரு தளவாட தொழிற்சாலையில் 120 இரும்பு வார்ப்படங்கள் வேறொரு தொழிற்சாலைக்கென தயாரிக்கப்பட்டு, அவை ரத்து செய்யப் பட்டதால் சர்க்காருக்கு 1,27,832 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

மக்கள் சபையில் கணக்கு தணிக்கை அறிக்கை சமர்ப்பித்த ரெவின்யூ மந்திரி திரு. எம். சி. ஷா இந்த ஊழல்களை வெளியிட்டிருக்கிறார் :

இன்னும் விட்டுப் போன ஊழல்கள் ஏராளமாக இருக்கின்றனவாம் !

சர்க்காரின் இத்தகைய பொறுப்பற்ற தன்மைகளுக்கெல்லாம்—மக்களின் வரிப்பணம் பாழாக்கப்படுகிறதே என்று நாடு பெருமூச்சு விடுகிறது.

நாடாளும் நாயகர்களோ உல்லாச ஓடத்தில் மிதந்து கொண்டிருக்கின்றனர்.

இந்திய சர்க்கார் மற்ற துறைகளைவிட இராணுவத்திற்கென ஒதுக்கி இருக்கும் தொகையே அதிகம் என்று நாடு குமுறிக்கிடக்கும் இந்த நேரத்தில் ராணுவத்துரையிலே மக்களின் வரிப்பணம், குப்பை மேட்டிலே வாரி இறைக்கப்படும் கொடுமையை—எந்த ஜனநாயக சர்க்காரும் அனுமதிக்காது !

வெள்ளையன்; வீண் ஆடம்பரக்காரன்; நாம் கொட்டிக் கொடுக்கும் வரிப்பணத்தை வெறியாட்டங்களிலும், வீண் கேளிக்கைகளிலும் நாசமாக்குகிறான்; என்று அன்று ஓலமெழுப்பிய தேசியத் திருவாளர்கள்; ஊழல் நாற்றம் சகிக்க முடியாத அளவிற்கு வளர்த்துவிட்ட, இந்திய சர்க்காரை 'ஏன்' என்று கேட்கவும் நாதியற்றவர்களாகி இருக்கிறார்கள் :

சர்க்கார் அதிகாரிகளே குறிப்பிடுகின்றனர்; தாங்க முடியாத அளவிற்கு 'அறிவின்மை'யும், 'அனுபவக்' குறைவும் நிர்வாகத் துறையிலே மலிந்து விட்டது என்று!

'பாதுகாப்பு முதலீடு இனத்தில் மிச்சப் படுத்துவது அதிகமாகி விட்டது. அனுமதிக்கப்பட்ட தொகையில் 5 ல் 2 பங்கு மிச்சப் படுத்தப் பட்டுள்ளது' ரெவின்யூ அமைச்சரின் அறிக்கை இது:

அனுமதிக்கப்பட்ட தொகையில் 5 ல் 2 பங்கு பாழாக்கப் பட்டுள்ளதாம்!

—அதிகாரிகளின் இத்தகைய ஊதாரித்தனத்திற்கு யார் காரணம் ?

'அகிம்சாவாதிகள்' செங்கோலோச்சிக் கொண்டிருக்கும் பாரத பூமியிலேதான் ராணுவத்தின் பெயரால் பல கோடி ரூபாய்கள் பாழாக்கப் படுகின்றன!

ஊழல்களை மலையென வளரவிட்டுக் கொண்டிருக்கும் பாரத சர்க்காருக்கு 'ராஜ கோட்டம்' வடிக்கின்ற கண்ணீர்தான் அறிவு புகட்ட வேண்டும் என்று தேசியத் தோழர்களே முணுமுணுப்பது நம் செவிகளைத் தொடாமலில்லை!

## அவர் ஒரு ஆணவக்காரர்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி.

கொலைக்குற்றங்கள் அதிகமாகக் காட்டவில்லை என்று கூறுகிறது."

—இப்படியும் பதஞ்சலியார் ஆதாரங்களை அள்ளி வீசியிருக்கிறார் !

பயத்தையும், பீதியையும் நடமாட விட்டே பிழைப்பு நடத்தும் கூட்டத்தின் தலைவர், ஆச்சாரியார் !

"கிட்டே வராதே; தீட்டாகி விடும்" என்று பயம் கிளப்புகிறது, ஒரு புறம் !

"அப்பாவுக்குத் திவஷம் கொடுக்க வில்லையா ? அவருடைய ஆவி சுற்றிக் கொண்டே இருக்கும் !"— அச்சம் இன்னொரு புறம் !

"கர்ப்பக் கிரகத்துக்குள் நுழையாதே; பாவம் சூழ்ந்து கொள்ளும் !" — அங்கும் அச்சம்தான் !

—அச்சத்தை ஆணி வேராகக் கொண்டு ஆரிய நச்சு மரமே வளர்ந்திருக்கிறது !

பதஞ்சலியார் நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்தவர்; எனவே தெளிவு பெற்றிருக்கிறார் !

ஆச்சாரியார் அக்ரகாரத்தின் காவலர்; அழிந்துவரும் சனாதனத்தைச் செப்பனிட நினைக்கும் பிராமணோத்தமர்—எனவே தான் அச்சத்தை அஸ்திவாரமாக அமைத்தே சமுதாயத்தை நோக்குகிறார் !

ஆச்சாரியாரைப் போலவே, ஆங்கில நாட்டவரும் அச்சத்தைக் கிளப்பி விட்டு, ஆட்சிச் சக்கரத்தைச் சுற்றும் நோக்கம் கொண்டவர்கள் தான்; துப்பாக்கி முனையைக் காட்டியே நாடு பிடிக்கும் வேட்டை நாய்களாயிற்றே அவர்கள் !

அவர்களுக்குத் தெரியாமலா போய்விட்டது பயத்தின் பெருமை !

—இருந்தும் மரண தண்டனையை ஒழித்துக் கட்டியிருக்கிறார்களே, ஏன் ?

காரணம் நிறைய இருக்கிறது.

சென்ற ஆண்டு ஜூலை மாதம் ரூத் எல்லிஸ் என்னும் எழில் நங்கை — இளமை குறையா இன்பப் பொய்கை தூக்கு மேடையிலே தொங்கினாள் !

ஒரு பெண்ணைத் தூக்கிலேற்றும் இந்த நிகழ்ச்சி இங்கிலாந்துத் தீவையே சோகத்தால் கப்பியது !

அவள் தூக்கிலிடப் படுவதை பொது மக்கள் விரும்பவேயில்லை; குற்றம் செய்திருந்தாலும், அவளுக்கு ஆயுள் தண்டனை கொடுத்திருக்கக் கூடாதா? பல ஆண்டுகளுக்குப் பிறகாவது அந்த அழகுக் கோவில் திரும்பி வருவதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமே என்ற பேச்சு கிளம்பிற்று !

—இங்கிலாந்தின் பாராளுமன்ற உருப்பினர்கள் மரண தண்டனையை ரத்து செய்வதற்கு இது ஒரு காரணமாக இல்லாவிட்டாலும், பொது மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள சம்பவங்கள் பல அங்கே நடைபெற்றிருக்கின்றன!

அவ்வளவு ஏன்? ஒரு போலீஸ் அதிகாரியைக் காயப்படுத்திய குற்றத்திற்காக மூன்று பேர் சிறைக்காவல் பெற்றனர்,

ஆனால் இரண்டு ஆண்டுகள் அவர்கள் சிறையிலே வாடிய பிறகு, அவர்கள் அன்றி வேறு யாரோ அந்தக் குற்றத்தைச் செய்ததாக நிரூபிக்கப் பட்டது.

உண்மையில் அந்தப் போலீஸ் அதிகாரி மட்டும் கொல்லப்பட்டிருந்தால், சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்ட அந்த மூவரும் தூக்கிலே தொங்கியிருப்பர் !

இதைப் போலத்தான் திருமதி பிக்காடைக் என்பவர் கொலைக்குற்றம் ஒன்றிற்காக தூக்கு தண்டனை பெற்றார். அவருடைய பிணம் விழுந்து பல ஆண்டுகள் கழித்து, வேறு யாரோ ஒரு நபர் தனது சாவுப் படுக்கையில், தானே அந்தக் கொலையைச் செய்து தப்பியவர் என்ற உண்மையைச் சொன்னாராம்.

—இப்படிப் பல நிகழ்ச்சிகள்! தூக்கு தண்டனை பெற்றவன் ஒருவனாயிருப்பான் ; அவன் சவம் மண்ணோடு மண்ணான பிறகுதான் தெரியவரும், கொலை செய்த நபர் வேறு யாரோ என்று !

நீதிபதிகள் என்ன கடவுள் அருள் பெற்றவர்களா, உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு ?

அவ்வளவு தூரம் போவானேன் ? உண்மையிலேயே லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் உயர்நீதிமன்றம் கலைவாணருக்கும், பாகவதருக்கும் தூக்கு தண்டனை விதித்ததாக வைத்துக் கொள்ளுங்கள். கலைவாணரும், பாகவதரும் ஏதோ வசதிக் குறைவால் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போக முடியாத நிலை ஏற்பட்டால் தூக்கிலே அல்லவா தொங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்?

—கொலைக்கஞ்சா ஆச்சாரியாரின் மனப்போக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கண்டும் கல்லாகத்தானே இருக்கிறது !

இருதயமும், அதிலே இரக்க உணர்ச்சியும் பெற்ற தோழர்களே! ஒரு முறை உரக்கச் சிரியுங்கள்; மனித உடலும், மரத்துப்போன நெஞ்சமும் கொண்ட ஆச்சாரியார் நாம் பிறந்த மண்ணிலேதான் பிறந்திருக்கிறார் என்பதற்காக ?

★

# பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

## ★ மீன் குஞ்சு! ★

தூம்பிக் கூண்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கும் கிளியைப் பார்க்கும்போது எவ்வளவு பரிதாபமாக இருக்கும்; அந்தக் கிளியின் கண்களில்தான் எத்தனை 'பாவம்' தோன்றும்! அப்படிப்பட்ட கிளியின் நிலையிலேயுள்ள ஒரு தம்பியின் கதை இவ்வாரத்தில் வருகிறது. படியுங்கள் :

துருப்பிடித்துப் போன ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, தெருவையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன், அந்தக் கிளியைப் போலவே. அதென்ன சிறையா? இல்லை; சிறையினும் கொடிய சித்திரவதைக் கூடம்! இதை நானே சொல்வானேன்? அதோ பாருங்கள், அவனது கண் வழியே கன்னத்தில் உருண்டோடுகின்றனவே கண்ணீர்த் திவலைகள்—வதை தாங்காது வாடிக் கிடக்கிறதே அன்பொழுகும் முகம்—இவை எல்லாம் சொல்லுகின்றன. அதிருக்கட்டும்.யார் அவன்?...

வெளியே பார்த்துக்கொண்டிருந்த அவன் எதையோ கவனித்தான். சற்று நிமிர்ந்து நின்ருன். உற்று நோக்கினுன். எதிர் வீட்டுப் பையன் கையில் ஒரு அஞ்சல் உரையுடன் வெளியே வந்துகொண்டிருந்தான்; அஞ்சல் நிலையத்தை நோக்கி ஓடினுன். அவன் அந்தக் கடிதத்தை தபாலில் சேர்த்துவிடத்தான் ஓடுகிருன். அதைப் பார்த்தான் நம் தம்பி. கண நேரத்தில் அவன் மனதிலே சிந்தனை—அடுத்து யோசனை—பின் முடிவு!

அவனும் கடிதம் எழுதினுல் என்ன? அவனது கஷ்டங்களை-மிருகத்தினும் கேடாக அவன் படும் தொல்லைகளைப் பற்றி எழுதலாமே! எழுதலாம். யாருக்கு எழுதுவது? உலகத்துக்கெல்லாம் தந்தையாக 'கடவுள்' ஒருவர் இருக்கிருராமே, அவருக்கே எழுதிவிட்டால் என்ன? இதை நினைத்தபோது அவன் ஏனே முகத்தை சுளித்துக் கொண்டான். ஏன் தெரியுமா? அவனுக்கு அதில் நம்பிக்கையில்லை. அவனும் பல முறை கோயிலுக்குப் போயிருக்கிருன்; சிலையின் முன்னே நின்று கன்னத்தில் போட்டிருக்கிருன்; கையெடுத்துக் கும்பிட்டிருக்கிருன், கஷ்டம் தீர வேண்டுமென்று. ஆனல் பலன் என்னவோ பூஜ்யம்தான். கடவுள் கவலையைப் போக்கவில்லை. கோயிலுக்குப் போய், வேலையில் தாமதம் செய்ததாக தினம் தினம் உதை பட்டிருக்கிருன்; வதை பட்டிருக்கிருன். ஆகவே அவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

எங்கிருந்தோ "அம்மா" என்று அலறியது ஒரு கன்று. மறுகணம் அவன் மனதிலே அம்மா வந்தாள். ஆமாம்; அம்மாதான்! அவள் நல்லவள்; மிக மிக நல்லவள். மகனுக்காக அவள் எவ்வளவு பாடுபட்டிருக்கிருள் தெரியுமா? 'அது வேண்டும், இது வேண்டும்' என்று மகன் அழும்போதெல்லாம், வாங்கித்தர முடியாமல் தவிப்பாள்; தடுமாறுவாள். ஆனல் உடனே ஒன்றை மட்டும் தருவாள், அழுது கொண்டே. மகனே சிரித்து விடுவான். அந்த 'ஒன்று'க்கு செலவு இல்லை; அதற்கு விலையே கிடையாது. என்ன என்கிறீர்களா? முத்தம்! அம்மாவின் அன்பும் ஆசையும் கலந்த விலை மதிப்பற்ற முத்தத்தை மட்டுமே பெற்று, அவன் எவ்வளவோ ஆசைகளை மறந்திருக்கிருன். இப்போது அந்த அம்மாவுக்கே எழுதினுல் என்ன? ஆமாம்; எழுதத்தான் வேண்டும். கடையில் யாரும் இல்லை; முதலாளியும் நன்ருகத் தூங்குகிருர். இதுதான் சமயம்!

அவன் ஜன்னலை விட்டு நகர்ந்து மேஜைக்கு அருகில் சென்ருன். மேஜைமேல் இருந்த இங்கி புட்டியை எடுக்க வேண்டுமே! அவனுக்கு எட்டவில்லை. ஏழு வயதுப் பையன்தானே! தாவி எடுத்தான். எடுத்த வேகத்தில் இங்கி ததும்பியது. அவனது அழுக்கடைந்த சட்டையெல்லாம் கொட்டியது. அவன் 'ச்சு, ச்சு' என்றபடியே சட்டையைத் துடைத்தான். கையெல்லாம் இங்கி பட்டு விட்டது. அவன் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அங்கேயே இருந்த பேனு ஒன்றையும் எடுத்துக் கொண்டான். ஜன்னலிடம் வந்தான். அப்புறம் தான் அவனது நினைவுக்கு வந்தது, கடிதம் எழுத காகிதம் வேண்டும் என்று! தேடினுன். ஒரு துண்டுக் காகிதத்தைக்கூட காணேம். என்ன செய்வது? அப்போது சுவற்றிலே தொங்கிக் கொண்டிருந்த மாதாந்திர காலண்டர் அவன் கண்களிலே தென்பட்டது. அன்றுடன் ஒரு மாதம் முடிவடைகிறது—நாளை முதல்தேதி! ஆகவே அந்தமாதத் தேதித் தாளைக் கிழித்து விடலாம்! அதன் பின்புறம் எழுதியும் விடலாம்— என்று முடிவு கட்டினுன். முடிவு செயலாகியது. அவனுக்குக் காகிதம் கிடைத்து விட்டது.

காகிதத்தையும் இங்கி புட்டியையும் ஜன்னலில் வைத்தான். எதிரே மண்டியிட்டு உட்கார்ந்தான். ஜன்னல் இப்போது மேஜையாகியது எழுத ஆரம்பித்தான்.

"அன்புள்ள என் அம்மாவே, உங்களுக்கு உங்கள் பிள்ளை சுந்தா எழுதிக் கொண்டது...

அவன் பெயர் சுந்தரம். ஆனல் சுந்தா என்றுதான் அம்மா அன்புடன் அழைப்பாள். இதை எழுதி முடித்தவுடன் அவன் சற்றுநேரம் பேசாமல் இருந்தான். அதற்குமேல் எப்படி எழுதுவது? எதிர்வீட்டு வாசலில் அந்த வீட்டு அம்மா வந்து நின்ருள். அவள் முகத்தில் ஏதோ கவலை தெரிந்தது. தபால் பெட்டியில் கடிதத்தை சேர்க்கச் சென்ற மகன் திரும்பவில்லையே என்ற குழப்பம் போலும். அதே நேரத்தில் பையனும் திரும்பி வந்தான். அம்மா பாய்ந்து சென்ருள். அவனை வாரி அணைத்தாள். அப்போது அவள் முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி!

அதைப் பார்த்தான் சுந்தரம். விறுவிறு என்று எழுத ஆரம்பித்தான்.

"அம்மா! நீங்கள் என் கூட இல்லாதது எவ்வளவு வருத்தமாயிருக்கிறது தெரியுமா? என்னை 'சுந்தா'ன்னு கூப்பிட ஆளே இல்லையம்மா இங்கே! 'கழுதை-நாயி' அப்படிததான் கூப்பிடுருங்க இந்த செருப்புக் கடையில இருக்க எனக்கு புடிக்கவேஇல்லே. கடைக்காரரு ரொம்பவும் கோபக்காரர். அன்னைக்கு நான் என்னவோ சின்ன தப்பு செய்துட்டேன். தப்புகூட இல்லேம்மா; செருப்பு தைக்கிற ஊசியை மறதியா எங்கேயோ வச்சுட்டேன். அதுக்காக என்ன செஞ்சார் தெரியுமா? அந்த ஊசியைத் தேடி எடுத்து, அதாலேயே என் கையில் குத்திட்டாரம்மா! குபுகுபுன்னு ரத்தம் வந்துடுச்சி...இன்னும் தழும்பு மாறலே...என்னை ஏம்மா இங்க விட்டுட்டு வெளியூர் போனீங்க?...

பைத்தியக்காரன், இந்தக் கேள்விக்கு அம்மாவிடமிருந்து பதிலா வரும்?

அவள் இருந்திருந்தால் தன் செல்வனை இப்படி சோற்றுக்குத் தவிக்கும் நிலையிலா விட்டிருப்பாள்? பெற்ற பாசத்தால்தான் அந்த பரிதாபத்தைத் தாங்க முடியுமா? முடியாது—முடியாது. ஆனல் அந்த அம்மா இப்போது எங்கே?

கணவனை இழந்தவள் அவள். பிழைப்புக்கு வழியின்றி பட்ட தொல்லைகள் ஏராளம். தன் மகன்—ஏதுமறியா சிசு—பசி, பட்டினியுடன் அலறுவது கண்டு அழுதவள். எத்தனையோ முறை ஆற்றுப் பாலத்திற்குச் சென்று, பின் மகனுக்காக சாவை வெறுத்து ஓடிவந்தவள்.

இந்நிலையில், ஊர் சுற்றிப் பிச்சை எடுத்த அவளை, எங்கிருந்தோ வந்த பொல்லாத நோய் பிடித்துக் கொண்டது. அவள் சாவுக்கு அஞ்சவில்லை. ஆனல் அதற்கு முன்பு தன் மகனை யாரிடமாவது ஒப்படைத்துவிட எண்ணினுள். அதன்படி ஒரு செருப்புக் கடைக்காரரிடம் கெஞ்சி, அவனை அக்கடையில் தள்ளி விட்டாள். விரைவில் பொல்லாத உயிரும், அவளது உடலை உதறித் தள்ளி விட்டுப்பறந்தது. சுந்தரம் அப்போது மழலை—அதை அறியவில்லை. "அம்மா" என்று அவன் அழுத போதெல்லாம், 'வெளியூர் போயிருக்கிருள்' என்ற ஆறுதலான பதில் தான் தரப்பட்டது.

சுந்தரம் மீண்டும் எழுதினுன்.

"கடைக்காரர்—மற்ற பசங்கள் எல்லாரும் என்னை அடி அடியென்று அடிக்கிருங்க. நீங்கள் அடிக்கடி முத்தம் கொடுப்பீங்களே, அந்தக் கன்னம் இப்போ ஒரே வீக்கமா இருக்கு! ஏன் தெரியுமா? நேற்று என்னேட கடையிலிருக்கிற பையன், 'மேஜையிலே பழம் வச்சிருக்கேன், எடுத்துக்கிட்டு வாடா சுந்தரம், சாப்பிடலாம்' என்ருன். நான் அது அவனேட பழம்தான்னு நெனச்சி எடுத்துக் கொடுத்தேன். அவன் எனக்கு கொஞ்சம்கூட கொடுக்கலே. தோலை மட்டும் கொடுத்தான். அதை கையிலே வச்சிருக்கும்போது முதலாளி வந்துட்டாரு. அவ்வளவுதாம்மா... அவரு பழமாம் அது...சும்மாயிருப்பாரா? நான்தான் பழத்தையெடுத்து சாப்பிட்டேன்னு என்னை அடிச்ச அடி இருக்கே ...ஐயையோ! அம்மா...இனிமேல் நான் இங்க இருக்கவே மாட்டேன்...! இருக்கவே முடியாது! உடனே நீங்கள் வந்து என்னை அழைச்சிகிட்டுப் போயிடுங்க...

அப்புறம் என்ன எழுதுவது? சுந்தரம் யோசித்தான். ஆனல் தபாலுக்கு நாழிகையாகிவிட்டதே— சீக்கிரம் முடிக்க வேண்டும்!

"தெரியுதா அம்மா? என்னுல் அடி வாங்க முடியலே! நீங்க வரலேன்னு நான் செத்தே போயிடுவேன்...செத்தே போயிடுவேன்! உடனே வாங்க — நான் காத்துகிட்டே இருப்பேன்— வழியெல்லாம் பாத்துக்கிட்டேயிருப்பேன்! என்னை உடனே அழைச்சுக் கிட்டு போங்க ... வாங்க...வாங்க ..."

கடிதம் முடிந்து விட்டது. அவசர அவசரமாக ஒரு கடித உரையைத் தேடி எடுத்தான். அதில் கடிதத்தைப் போட்டான்; ஒட்டினுன். விலாசம் எழுத வேண்டுமல்லவா? எழுதினுன்.

### 'சுந்தாவின் அம்மா'

அப்புறம்...? ஊர் போட வேண்டுமே! சுந்தரம் யோசித்தான். எந்த ஊர்? மூன்ருண்டுகளுக்கு முன் அம்மா 'வெளியூர்' போனதாகச் சொன்னுர்களே! அவனுக்கு ஏதோ யோசனை வந்துவிட்டது.எழுதினுன்.

### 'வெளியூர்'

'சுந்தாவின் அம்மா–வெளியூர்' முகவரி எழுதியாகி விட்டது. சுந்தரம் சிரித்துக் கொண்டான்.நாழிகையாகிவிட்டது. தபாலில் சேர்த்துவிட வேண்டுமல்லவா? வேகமாக நடந்தான். அந்த வேகத்தில் இங்கி புட்டி கீழே உருண்டதுகூட அவன் பார்வையில் படவில்லை. வெளியே ஓடி வந்தான். தபால் நிலயத்தை நோக்கி ஓடினுன். பெட்டியில் சேர்த்தான். கடைக்குத்திரும்பினுன்.

அங்கே......?

உடைந்து கிடந்த பாட்டில்–சிதறிக் கிடந்த இங்கி — இவைகளை கனல் கக்கும் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த முதலாளி, இங்கி சட்டையுடன் மெதுவாக வந்த அவன் மேல் பாய்ந்தார். வழக்கமான 'விளையாட்டு' தான்—ஆனல், சுந்தரமோ இப்போது வழக்கம்போல் அழவில்லை! அவன் ஏன் அழவேண்டும்? அம்மாவுக்குக் கடிதம் எழுதியாகி விட்டதே– அவள்தான் வந்து அழைத்துக் கொண்டு போய் விடுவாளே! இதை நினைத்தான்—சிரித்தான்.

அதே சமயம் தபால் நிலயத்திலே......தபால்காரரும் சிரித்துக் கொண்டே, விசித்திரமான முகவரியுடன், தபால் தலை ஒட்டாது கிடைத்த அவனது கடிதத்தை சுக்கு நூருகக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தார்!

★

அன்று இரவு... கடையோரத்து திண்ணையிலே குளிருக்குப் பயந்து சுருண்டு கிடந்த சுந்தரம் தூக்கத்தில் அம்மா வந்து அழைத்துப்போவதாக கனவு கண்டான். தினம் தினம் கண்டு வருகிருன்! கரையில் விழுந்த மீன் குஞ்சாகத் தவிக்கிருன்!

—சொர்ணம்

# கடைசிப்பக்கம்

## எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்
(★) பி. வி. ஞானவேல்;
சென்னை-12.

ராசமாணிக்கம், சென்னை-12.

(?) ஓய் எழுத்தாணியாரே! பிப்ரவரி 20ல் நீர் எங்கே போயிருந்தீர்?

19-ந் தேதி இரவு கோவையிலிருந்து புறப்பட்டு 20-ந் தேதி சூரியோதயத்திற்கு சென்னைக்கு ஓடிவந்து, தோழர் மதியழகனோடு சேர்ந்து சென்னையின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் போய் ஹர்த்தால் நிகழ்ச்சிகளை போறடபோடு கவனித்துக் கொண்டிருந்தேன். என்; இந்த சேதி உமக்குத் தெரியாதா? தேசீய ஏடுகளில் கூட வந்திருந்ததே ஐயா!

ந. காட்டுவராயன்; கன்னிவாடி.

(?) வாழ்க்கை ஒரு வானவில் என்று கூறுவோருக்கு உமது பதில் என்ன?

அந்த வானவில் மறைந்துவிடுவதற்குள் வர்ணங்களைப் பார்த்துவிடவேண்டுமென்பதுதான்!

ராமநாதன்; காரைக்குடி.

(?) காமராசருக்கும், சுப்ரமணியம் பக்தவச்சலனார் ஆகியோருக்கும் உள்ள தொடர்பு என்ன?

சுப்ரமணியம் காமராசரின் வாய்; பக்தவச்சலம் அவரது பற்கள்!

மாறன்; சிவந்திபட்டி.

(?) இந்தியாவில் அணு குண்டு முதலிய ஆயுதங்கள் தயாரானால்...?

அதிக ரவுண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் ஆச்சாரியார்களுக்கு வேலை சுலபமாகும்!

ஆர். ராமசாமி; மைசூர்.

(?) மானம் போன பின்பு வாழ்வது ஒரு வாழ்வா?

ஆமாம்; அவர்களுக்குத்தான் மந்திரி பதவி கிடைக்கும் என்கிறார்கள்.

அழகேசன்; கோவில்பட்டி.

(?) இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி யாராக இருக்கலாம்?

நிச்சயமாக தென்னாட்டுக்காரர் இராதாகிருஷ்ணனுக்கு அந்தப் பதவி கிடைக்க முடியாது!

ராமையா; மாயூரம்.

(?) காமராசருக்கு இல்லாதது எது?

முதகெலும்பு!

(?) கனம் சுப்ரமணியத்தின் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டால் பார்வை தெரியுமா?

இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்? எப்போதுமே அவர் 'நாட்டு நடப்பு' தெரியாதவர்தான்!

ஆர். கே. ஜமால்; வாணியம்பாடி.

(?) கவர்னர் தொழிலுக்குள்ள தகுதி என்ன?

ஒன்று முதல் பத்து லட்சம்வரை எண்ணத் தெரிய வேண்டும்!

அன்புப்பழம்; யாழ்ப்பாணம்.

(?) தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. உண்மையிலேயே என்ன குற்றம்தான் செய்தார்?

ஆமாம்; வன்னியப் பெருமக்களிடையே சுதந்தரமாகக் ஆதிக்கம் செலுத்தி வந்த ராமசாமிப் படையாச்சியின் முகமூடியைக் கிழித்தெறிந்தாராம்! இது பெரிய குற்றமல்லவா?

சாமிநாதன்; கடலூர்.

(?) பிணங்கள் பேச முடியுமா?

என் முடியாது; ஆச்சாரியார் பேசிக் கொண்டு தானே இருக்கிறார்!

(?) கடல் பெரிதா?

இல்லை; அதைவிடப் பெரிது பிப்ரவரி 20-அன்று சென்னை மரீனாவில் கூடிய கூட்டம்!

பு. தயாளன், மதுரை.

(?) இலட்சியக் கனவு காண்பவனின் தன்மையாது?

அவன் தி. மு. க. வின் அங்கத்தினராக இருப்பான்!

கோமதிநாயகம்; திருநெல்வேலி.

(?) உபதேசம்; புத்திமதி; யோசனை —இவைகளெல்லாம் என்ன?

சமுதாயச் சந்தையிலே காசில்லாமல் இனாமாகக் கிடைக்கக் கூடிய பொருள்கள்!

ஆர். வி. எஸ். பதி; வேலூர்.

(?) பசி யென்றால் என்ன?

முறையே, குழந்தைக்குப் பால்; வாலிபனுக்குக் காதல்; வயோதிகனுக்கு நிம்மதி!

(★) பி. வி. ஞானவேல்,
சென்னை-12.

(?) உரிமை முரசு கிழிந்து விட்டால்?

பிறகு ஆணவக் காரர்களின் முதுகுத் தோல் கிடைக்காமலா போய்விடும்?

கே. சதாசிவம், லட்சுமிபுரம்.

(?) தமிழ்நாடு திடீரென்று தீப்பற்றி எறிந்தால் என்ன நடக்கும்!

சுப்ரமணியம் மட்டும் டெல்லிக்குத் தப்பி ஓடுவார், திரும்பி வரும்போது முதல் மந்திரி போட்டி இருக்காது—என்ற நினைப்பில்!

# அர்த்தாலுக்குப் பிறகு!

## 10-3-56 சனி மாலை 5 மணிக்கு

நுங்கம்பாக்கம் ரயிலடிக்கருகிலுள்ள

## தி. மு. க. திடலில்

★

பேசுவோர்:

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன், கவிஞர் கண்ணதாசன், கல்யாணசுந்தரம், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், சத்தியவாணிமுத்து, மு. கருணாநிதி, அலமேலு அப்பாதுரை.

இன்னிசை:

இசைச்செல்வி, ஜி. கஸ்தூரி, குடந்தை, சீனிவாசன்.

★: தி. மு. கழகத் தலைமை நிலையம் :★

## திரையில் தேவ லீலைகள்...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

ஆபாசமான கடவுளர்களை, மாணவர்களிடம் அறிமுகப் படுத்தினால் அவர்கள் அரும்பு நெஞ்சங்களில் ஒழுங்கீனம் பரவுவதற்கு இடமளிப்பதாகும்!

சினிமாவைக் கண்டு முகம் சுளிக்கும் குன்றக்குடி போன்றவர்கள்; புராணங்களில் வரும் 'தேவ லீலைகளை' படமாக்கி; செஞ்சார் பீடத்தில் அமர்ந்திருக்கும் 'சாஸ்திரி—சர்மாக்களின்' கரங்களிலே இருக்கும் கத்தரிக்கோலும் வேலை செய்யாமல் இருந்து; அப்படியே திரைக்கு வந்தால் நாடு வேண்டாம்,—குன்றக்குடி போன்ற 'ஞானம்' பெற்றவர்கள் 'ஜோதியோடு ஜோதியாய்' இணைந்தபடி உலகத்தைப் பார்ப்பவர்கள் தாங்கிக்கொள்வார்களா? துணிவிருக்கிறதா? என்பதுதான் நாம் எழுப்புகின்ற வினா? உறுதியோடு வழிபட வேண்டுமாம்! அந்த உறுதி மக்களிடையே இல்லாமல் போனது ஏனோ தெரியவில்லை!

உறுதியோடு வழிபட்டால், 'பரிந்து' வருவாராம்! நல்லவேளை பறந்து வருவார், என்று குறிப்பிடாமல் விட்டாரே ஐயன்!

உறுதியோடு வழி படாதவர்களுக்கு அருள் பாலிக்க வேண்டாம்! 'தலை கனம்' பிடித்தவர்கள் என்று ஒதுக்கி விடட்டும்!

ஊனை மறந்து, உயிரை சுருக்கிக் கொண்டு அனல் மூச்சு விட்டபடி, கடுந்தவம் — இல்லை; இல்லை, 'அகோரா' தவம்புரிந்தவர்களுக்கு ஏன் காட்சி தரவில்லையோ—அறியோம்! அப்படித் தந்திருந்தால்;

'நாடினேன் — தேடினேன்' என்று ஆரம்பித்து 'கண்டிலனே!' என்ற முகாரியோடு முடித்திருப்பரா முனிவர்கள்;

இந்த இருபதாம் நூற்றாண்டில் தான் பேசி இருக்கிறார்!

அடிகளார் கூற்றுப்படி எல்லோருமே திருஞான சம்மந்தர்களாகி விட்டால்; 'ஞானப்' பால் கொடுக்க — ஆள் பஞ்சமல்லவா ஏற்பட்டுவிடும்!

குன்றக் குடி யடிகளார் அறிமுகப் படுத்திவைக்கும் ஆண்டவனின் சோதனைகளுக்கு, ஆளாகி அல்லல்பட, இக்காலத்து அறிவுலகம் தயாராய் இல்லை!

பூத்திருக்கும் புது யுகத்திலே திருஞானசம்மந்தர்களும் — சிறு தொண்டர்களும்— பயித்தியக் காரர்களாகத்தான் தோற்றமளிக்கிறார்கள்!

'இயற்பகை நாயனார்' பெயரைச் சொன்னாலே, பெண்கள் சமுதாயம் கண்களில் கனலேற்றி—காரி உமிழத் தொடங்குவர்;

எனவே; அடிகளாரின் 'அறிமுகப்' பொருள்களெல்லாம்; 'அறிவுலகத்தின்' அவமானச் சின்னங்கள்!

அந்த 'உறவு' நமக்கு வேண்டாம்'

அந்த 'நட்பு' ஆபாசமானது! வேண்டுமானால் — குன்றக் குடியடிகளாரே அவைகளை ஏகபோக உரிமையாக்கிக் கொள்வதில்— நமக்கும், குறிப்பாக அறிவுலகத்திற்கும் ஆட்சேபனை எதுவுமில்லை!

★

ஆசிரியரும், அச்சிடுபவரும் வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6